



# வித்துவான் க.ந.வேலன் அவர்கள்

06.11.1923 - 07.06.2003

## ஈழத் தமிழரின் இணையற்ற இலக்கிய தீபம்

நெஞ்சு நிமிர்த்தியிந் நிலத்தில் யார்க்கும்
அஞ்சு வதின்றியுளம் அனைத்தும் முரைக்கும்
குஞ்சர மன்னவேலன் குவலய மகன்றின்று
தஞ்ச மடைதானிறை தாளிணை பணிந்து

பஞ்ச மில்லாத பகுத்தறிவுக் கடல்
பாரிற் சிதறிய தமிழ் உலகத்தின்
தஞ்ச மடைந்தவர் தன்மானத் தந்தை
தாய் போலான தண்ணன்புத் தேன்
கொஞ்சு தமிழன் குறையறு புலமை
கோலமார் தொல் இலக்கியத் தகைமை
மஞ்ச மடைந்தது மண்ணை விட்டகன்று
மானத் தமிழ் வேலன் மந்திரம் இன்று



வித்துவான் வேலன் வித்தினான் அறிவு, விளைந்தனர் சிலபேர்.
அவர்களில் நானும் ஒருவன் என்று கூற நான் ஆசைப்பட்டாலும், அவர் அப்படிக்கூறுவதை ஏற்றிருப்பாரோ தெரியாது. சீடர்கள் குருவைத் தேடிப்போக வேண்டும் என்று நினைக்கின்ற ஒரு காலத்தில், யோகியர்களின் முறைப்படி, சீடர்களை நாடிப்போனவர் வேலன் அவர்கள். கல்வி என்பது விஞ்ஞானக் கருத்துக்களைத் தொகுப்பதோ தமிழ் விடயங்களைத் திரட்டுவதோ அல்ல, மாணவனைச் சிந்திக்க வைப்பதே கல்வி என்று நம்பிச் செயற்பட்டவர் வேலன் அவர்கள். அதனாலே தான் தமிழ்ப்பண்டிதர்கள், குற்றியல் உகரமும், அளபெடையும், அன்மொழித் தொகையும், வினையால் அணையும் பெயரும், படிப்பிக்க முனைந்த தமிழ் வகுப்பறைகளில், வித்துவான் வேலன் அவர்கள், தமிழியலையும், வாழ்வியலையும், விகடமாகவும், பகடியாகவும், படிப்பித்து வந்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி, பருத்தித்துறை காட்லிக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில், ஆசிரியனாகக் கடமையாற்றிய காலங்களில், தமிழைப் பாடமாக எடுக்காத தமிழ் மாணவர்களும், வேலனின் தமிழ் வகுப்பில் இருந்து, அவரது வாழ்வுத் தமிழ்க் கல்வியை வாஞ்சையுடன் விரும்பிக் கேட்டார்கள். கணித வகுப்பில் இருக்க வேண்டிய மாணவர்கள், தமிழ் வகுப்பில் பிரசன்னமாக இருந்த நிலை, கணித ஆசிரியருக்கோ, கல்லூரித் தலைவருக்கோ திருத்தி தரவில்லைத் தான்! ஆனால் கணித வகுப்பிற்கு வருந்தியழைத்தும் வாராத தமிழ் மாணவர்கள், பொருந்துவன போமின் என்றால் போகா என்றபடி, தமிழ் வகுப்பில் பொருந்தினார்கள் என்ற வரலாறு, ஆசிரிய வரலாற்றில் ஆச்சரியமான வரலாறு,

"Education Is The Manifestation of Knowledge Already in Man" என்று சுவாமி விவேகானந்தர், கல்வி என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் செய்தார். வள்ளுவர், இன்னும் ஒரு படி மேலே போய் " தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு" என்று குறள் செய்தார். மாணவர்கள் அறிவின் ஊற்றுக்கள், அவர்களுடைய ஊற்றுக் கண்களைத் திறப்பதுதான் ஆசிரியனின் பணி என்பதை நன்றாக நம்பியவர் வேலன் அவர்கள்.

அதனாலே, மாணவர்களின் ஊற்றுக் கண்களை தமது கற்பித்தலின் மூலம் திறந்தார். இந்தக் கண் திறப்பினை, முக்கியத்தை உணராத

கல்லூரித் தலைவர்கள் பலர், அவர், மாணவருக்குத் தேவையற்ற வற்றைப் புகட்டுவதாகக் குறை கூறினார்கள். சலசலப்பு எதற்கும் அஞ்சாத வேலன், தனது பணியை இறக்கும் வரை செய்தார். அதனால் அவர் உயர்ந்தார். இன்று அந்த அறிவுக்கடலின் மறைவை மறக்கவும், அவரது அறிவின் ஒரு பகுதியையாகுதல் பெறத் தவறி விட்டோமே என்பதை உணர்ந்து பார்க்கவும் என, இந்த இறுதி வழியனுப்பு விழாவில் கூடியிருக்கிறோம்.

வித்துவான் வேலன் சாதாரணனாகப் பிறந்து, சாதாரண மாணவனாக வளர்ந்து, அசாதாரண மொழிப்பற்றினால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் போய்த் தமிழ் கற்று, அங்கே தமிழ் இலக்கிய, இலக்கண மேதைகளின் காலடியில் கிடந்து தமிழ் கற்று, பின்னர், ஊட்டியில் சில காலம் தமிழ் கற்பித்துப் பின்னர், இலங்கைக்கு மீண்டார்.

யாழ்ப்பாணத் தமிழர் பூமியில் உள்ள கல்லூரிகள் அவரை வரவேற்கு மென்று நம்பித் தான் நாடு திரும்பினார். ஆனால் அவரை வரவேற்க எந்தக் கல்லூரியும் தயாராக இருக்கவில்லை.

இன்றைய இலண்டன் போல, எவரும் தமிழ் கற்பிக்கலாம், அதற்கென்று பயிற்சி எதுவும் தேவையில்லை என்று ஆங்கிலம் படித்த கல்லூரித் தலைவர்கள் இறுமாப்புடன் நினைத்த ஒரு காலம் அந்தக் காலம். ஒறேற்றர் சுப்பிரமணியம் என்ற ஓர் உத்தம மாமனிதனின் உறவு வித்துவான் வேலனுக்குக் கிடைத்தது. ஆசிரியனாக வர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த அந்த உத்தமனின் உறவு, அந்தச் சீலனின் சீவன் போகும் வரை நீடித்தது. நடிக்கத் தெரியாதவர் வித்துவான் வேலன் அவர்கள். ஆகவே போலிகளின் கூட்டுறவு அவருக்கு ஏற்படவில்லை. அவருக்கு நண்பர்கள் வெகு சிலரே. பண்டிதர் இராசையா, வித்துவான் சி. ஆறுமுகம், ஒறேற்றர் சப்பிரமணியம், Handy Perinpanayagam, சம்பந்தர் ஐயா போன்றவர்களை மதித்துப் போற்றியவர் வேலன் அவர்கள். வயதான மூத்த இவர்கள் தான் அவருடைய நண்பர்கள்(friends). ஏனையவர்கள் வெறும் அறிமுகங்களே( acquaintances).

நமது தமிழ் இலக்கியங்களில் அடங்கியிருக்கின்ற தமிழ்ச் சரக்கின் பெறுமதியை, நுனித்துப் படித்து, நுகர்ந்து உணர வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால், இலங்கையில், இலக்கியக்கால ஆராய்ச்சி

செய்வதில் காலம் கடத்திய பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் பழக அவர் விரும்பவில்லை. அவர்களை ஒதுக்கியும் விட்டார். அவர்களுடன் மோதிக் கொண்டதும் உண்டு.
ஐந்து அண்டுகளுக்கு முன்னர், அவர் கொழும்புச் சீவியத்தை விட்டு விட்டு இலண்டனுக்கு வந்தது இலங்கைத் தமிழருக்கு இழப்பாயிற்று. ஆனால் ஐரோப்பியத் தமிழருக்கு ஆதாயமாயிற்று. இலங்கையில் வாழ்ந்த காலததில் இலக்கியத்துறையிலும், அரசியல் துறையிலும் சர்ச்சைகளைக் கிளப்பிப் புயல் எழுப்பிய வித்துவான் வேலன் அவர்கள், இலண்டனுக்கு வந்த பின்னரும் ஓயவில்லை.

இலண்டனுக்கு வந்த போது இருதய நோயுடன் வந்தார். இலண்டன் சுவாத்தியமும் மருத்துவ வசதிகளும் அவரை, அவரின் உளத்தின் தென்பை உற்சாகப்படுத்தின. எழுத வேண்டும், பேச வேண்டும், உரையாட வேண்டும் என்ற ஆர்வம் நாளுக்கு நாள் வளர்ந்தது. புலவர் சிவநாதன் என்ற ஓர் அன்பர், வித்துவானின் கவியுளம் கண்டு, அவரைக் காதலிக்கத் தொடங்கினார். சிவபாதசுந்தரம் என்ற ஓர் கணக்காளர் அவருக்கு ஏறத்தாள நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெறா மகனாக வந்து வாய்த்தார். துபாயில் இருந்த அவர், ஓய்வு பெற்று இலண்டனுக்கு வந்ததும், தந்தை மகன் உறவு மீண்டும் வலுப்பெற்றது. அவரது ஊக்குதலின் பேரில், வேலன் அவர்கள் திரும்பவும் நூல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டார். அரசியலில் உரசிப் பார்த்த காலத்தில், இலங்கையில், "சிங்கள வெறியா, இனப்பிரச்சினையா" என்ற நூலை எழுதியவர். அதன் பின்னர் மாணவர்க்கான தமிழ் உரை நூல்கள் பல எழுதி நற்பணி புரிந்தார்.
யாழ்ப்பாணச் சூழல் அவருடைய எழுத்து முயற்சிக்கு உதவவில்லை என்றே தோன்றுகின்றது.
சிங்களச் சில்லறைகளின் குண்டு மழையில் நனைந்து கரையாமல் தப்பிய வேலன் அவர்கள், 1991ம் ஆண்டு அளவில் கொழும்புக்கு வந்து சேர்ந்தார். அங்கே இந்துக் கலாச்சார அமைச்சினர் அவரது அறிவையும் ஆலோசனைகளையும் பயன்படுத்திக் கொண்டனர். அங்கும் பல்கலைக்கழகத்துப் பட்டதாரிகளான விரிவுரையளர்களின் நுனிப்புல் மேய்ச்சல்களைச் சகிக்க முடியாமல் ஒதுங்கிக் கொண்டார். 1995ஆம் ஆண்டளவில், திருமந்திரத்தின் சில பகுதிகளுக்கு விரிவுரை எழுதினார். ஆனால் அவை நூலுருப்பெறவில்லை இன்னமும்.

திருமந்திரத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்த வேளையில், யோகர் சுவாமி அவர்களைப்பற்றிய அருளாராய்ச்சி நூல் ஒன்றை எழுதிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதில் ஈடுபட்டு, "யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு" என்ற நூலை எழுதி வெளியிட்டார். அது இலக்கியச்சுவை சொட்டும் அருளியல் நூல்.

இலண்டனுக்கு வந்த பின்னர், பத்திரிகை மூலமும் வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும், பேச்சு மேடைகள் வாயிலாகவும் தமிழினத்தின் சிந்தனை மடையைத் திறந்து விட விரும்பினார். ஆனால், அவற்றின் ஏனோ தானோ என்ற போக்கு, அவருடைய விருப்பத்திற்குத் தடை போட்டது. ஊடகங்கள் அவரிடம் பொதிந்திருந்த சரக்கின் ஆழத்தை, அகலத்தைப் புரியத் தவறி விட்டன. தமிழறிஞர் தமிழின் பொதுச் சொத்து. அவர்களிடமிருந்து பயன் பெற வேண்டும், அவர்களைப் போற்றிப் பேணிப் பாதுகாக்க வேணடும் என்ற உணர்வு தமிழ் ஊடகங்களுக்கு இல்லாது போயிற்று. நம்மனோர்க்கும் அந்த உணர்வு போதியளவுக்கு இல்லாது போயிற்று.

சம்பந்தன் ஐயா உயிரோடு இருந்த போது அவரிடமிருந்து பயன் பெறத் தவறினோம். சிவபாதசுந்தரம் ஐயா அவர்கள் வாழ்ந்த போது கலாபவ-னத்தைக் கவனியாது விட்டமையால் அவரிடமிருந்த சொத்தினைப் பெற்றுக் கொள்ளத் தவறினோம். இப்போது வேலன் அவர்கள் தவறிப் போனார். அவரது அருஞ்சொத்தையும் அள்ளிப்பருகாமல் அயர்ந்து போனோம். விபரம் தெரிந்த வித்தகர்கள் ஒவ்வொருவராகப் போய் விட்டார்கள். முட்டறுக்க, ஐயம் அகற்ற, இலக்கிய இன்பம் சுவைக்க இன்றைக்கு இனியார் இலண்டனில்?

செ.சிறீக்கந்தராசா

பிற்குறிப்பு: வித்துவான் வேலன் அவர்கள் எமக்குத் தந்துள்ள அறிவுக் கருவூலங்கள் மூலம் தமிழ் மக்களும் அவர்தம் எதிர்காலச் சந்ததியினரும் பயன்பெற்றிட ஆவன செய்யவும் , அவர் நினைவைப் பேணும் பணிகளில் ஈடுபடவும் ஆர்வமுள்ளோர் எம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செ.சிறீக்கந்தராசா
*தொலைபேசி: 020 85909905*
*தொலைநகல்: 020 8478 5476*

## வித்துவான் வேலன் நித்தியம் எய்தினார்

மூத்த தலைமுறை முகமொன்று தனது
மூச்சை நிறுத்தி முத்தாய்ப்பு வைத்தது
பார்த்த விழிகள் இமைமூடிக் கொண்டன
பேச்சுச் சுரங்கம் பாதையை அடைத்தது
ஆர்த்த அன்பினால் என்னை அணைத்து
வாழ்த்திய உள்ளம் வரலாறானது
ஈர்த்த சிரிப்பு இறுகிப் போனது
இன்பத்தமிழ்த்தாய் இழப்பொன்றை ஈன்றாள்
கோர்த்துத் தமிழைக் கொட்டிய நாக்கு
வார்த்தைகள் மறந்து வாளாவிருந்தது
போர்த்த உடம்பைப் பூமியில் விட்டு
நித்தியம் எய்தினார் வித்துவான் வேலனே

ஏற்றம் நிறைந்த எங்கள் தமிழைப்
போற்றியும் எண்ணியும் எழுதியும் வாழ்ந்த
பாட்டன் ஒருவன் படுக்கையில் படுத்ததாய்க்
கேட்ட செய்தி நெஞ்சினை வருத்தத்
தீட்டும் கவிதை தருகிறேன் தேசமே
கூற்றம் வருதல் புதிதல்ல வெனினும்
குமுறும் நெஞ்சுக்கு அறிவென்ப தேது
ஆற்றல் நிறைந்தவர் அன்பினைக் கனிந்தவர்
உறவினைப் பிரிதல் கொடுமையிற் கொடுமையே!

மாற்றம் காண்கின்ற மாநிலப் படுக்கையில்
மதிநுட்பம் கொண்டோர் மதிக்கப்படுகையில்
சாற்றற்குரிய உள்ளொளிச் சால்புள்ளோர்
சரித்திரத்தினில் பதிக்கப்படுவது
நேற்று இன்று நாளைகள் கடந்த
நித்திய வாழ்வினை நினைவூட்டும் சான்றுகள்
தோற்றம் மறைவுத் தாழ்ப்பாள் கடந்து
தொடராய்ச் செல்லும் ஆன்மீக வாழ்வின்
பேற்றையடைந்தவர் பெருமைக்குரியவர்
பிறவாப் பிறவியின் கூற்றுக் குரியவர்

நேற்றுப் போலுள்ளது வித்துவான் வேலனை
நேரிற் கண்டு நெஞ்சை நிறைத்தது
காற்றுப்போல் வேகமாய் எனைநோக்கிவந்து
கைகளைப் பிடித்தது காட்சியாய் நிலைத்தது
ஊற்றுக் கொடுத்த எந்தையின்அன்பினை
உள்ளத்திருத்தி அவர்பெயர் கூறி
ஆற்றுப்படுத்தினார் எமக்குள் உறவினை
அன்று தொடங்கிற்று வித்துவான் நட்பே!

அன்று நம் மண்ணில் அவர்உரை கேட்ட
அனுபவம் எனக்கும் உண்டு உண்டு
என்றும் அழியா எங்கள் பெருங்கவி
ஆக்கிய புதுமைப் பெண்ணவள் தன்னை
தொண்டை உயர்த்திப் பாடிய வேலனை
கண்டேன் அரங்கினில் வட்டுக் கோட்டையில்
இன்றும் பாரதி என்ற கவிஞனை
இதயத்திருத்தி நின்ற வேலனைக்
கண்டேன் இலண்டனிற் கலந்தேன் நட்பினில்
கடைசி வரையிலென் கருத்தினில் நின்றனர்

ஒன்றாயமர்ந்து உண்டோம் உணவினைத்
தின்ற கையோடு தமிழையும் உண்டோம்
பண்டு பாடிய பழந்தமிழ்ப் புலவரின்
பண்பையும் பாடற் பழத்தையும் உண்டோம்
கன்றுகள் போல அவர்முன் னமர்ந்து
கனிந்த வாழ்வின் கனிரசம் உண்டோம்
மன்றுகள் கண்டவர் மனிதத்தின் உயர்வின்
மாண்புகள் கண்டவர் மழையாய்ப் பொழிய
நின்று நனைந்தோம் நிறைவினில் மகிழ்ந்தோம்
நீண்டதோர் கரையினில் நடப்பதாய் உணர்ந்தோம்.

உண்டு புசிப்பதில் உணவினை ரசிப்பதில்
ஊறும் அன்பினைக் கண்டு களிப்பதில்
பெண்டுகள் பற்றிப் பேசிப் புகழ்வதில்

பேறு பெற்றவர் வித்துவான் அவர்கள்!
நண்டுமீன் நல்ல இறால் கணவாயுடன்
நா சுரக்க விருந்தினை நயப்பவர்
என்றும் விருந்துக்கு நண்பரை அழைப்பதில்
நல்லதோர் துணை வாய்த்திடப் பெற்றவர்

இரத்த அழுத்தம் எனக்கும் உண்டு
உணர்ச்சி வயத்தில் உரத்துப் பேசுவேன்
கரத்தை உயர்த்திச் சிரிப்பார் வேலன்
கண்களால் என்னைச் சாந்தப்படுத்துவார்

பொய்யர் உலகின் புரட்டுத் தனங்களை
வையும்என்னை அமைதிப்படுத்துவார்
வையம் இதுதான் வாழ்வும் இதுதான்
வரம்புகள் உண்டு என்றெனக்குணர்த்துவார்
செய்யும் கடமையைச் செய்யும் என்று
சிரித்த படியே நல்வழி காட்டுவார்
ஐயம் எனக்கு எழுகின்ற போது
அவற்றிற் தெளிவினை யூட்டி மகிழ்வார்
கவிதை பற்றியும் கவித்துவம் பற்றியும்
கவிஞன் பற்றிம் எழுதிய வரிகளைச்
செவியிற் போட்டேன் சென்ற பொழுதினில்
பிசிறல் இல்லாத வரிகள் என்று
பெருமைப்படுத்தினார் பெரிய வித்துவான்

உள்ளத்தாற் பேசும் உண்மை மனிதரின்
உறவு கிடைப்பது அரிதிலும் அரிது
வெள்ளமாய்ப் பாயும் இதய அன்பின்
வீச்சிற் குளிப்பது அரிதுலும் அரிது
கள்ளமும் போலிக் கண்ணீரும் இல்லாத
காற்றை நுகர்வதும் அரிதிலும் அரிது
நல்லவர் நட்பு அரிதிலும் அரிது
நான் கண்ட வேலனின் உறவும் அரிது

| | |
|---|---|
| வேலனின் இழப்பு ....... | தமிழுக்கு இழப்பு |
| வேலனின் இழப்பு.... | அன்புக்கு இழப்பு |
| வேலனின் இழப்பு..... | மரபுக்கு இழப்பு |
| வேலனின் இழப்பு.... | மனிதத்தின் இழப்பு |

ஆழ உணர்வினைப் பகிர்ந்திட இனிநான்
யாரிட மையாஓடிப் போவேன்?
ஈழவிடுதலைத் தாகத்தைப் பகிர
எவரிடமையா ஓடிப் போவேன்?
கூழின் சுவையையும் ஊரின் உறவையும்
கூறி மகிழ யாரிடம் போவேன்?
வாழும் தூய கவிவளம் பற்றி
யாரொடு இனிநான் கருத்தாடப் போவேன்?

தமிழவைக் கூடத்தில் வந்து அமர்ந்து
தந்தார் ஆசிகள் எமக்கும் தமிழுக்கும்
தமிழவை நூலகம் தனைத் திறந்து
தாமே முதன்நூற் பதிவையும் பெற்றார்
தமைமறந்தென்னை வாழ்த்தியெனது
தகைமை கடந்த அன்புகள் செய்தார்
தமது நூலில் எனது பெயரையும்
தானே பதித்து இந்தத் துரும்பையும்
இமயத்தமிழோடு இணைத்து மகிழ்ந்தார்
இதைநான் எப்படித் தாங்கிக் கொள்ளுவேன்

வள்ளுவம் தன்னை வாரி வழங்கிய
வள்ளல் வேலன் இன்றிங்கில்லை
உள்ளத்தாற்பேசி உரிமையோடணைத்த
உயர்ந்த மனிதர் இன்றிங்கில்லை
கள்ளமும் போலிக் கண்ணீரும் இல்லாக்
கண்ணியம் இன்று கண்மூடி விட்டது
நல்லவர் நட்பினை நயம்பட உரைத்த
நாவும் நரம்பும் இளைப்பாறிவிட்டது

கம்பனைக் காட்டிய விரல்கள் போயின
கலித்தொகைக் காட்சிகள் திரைமூடிக் கொண்டன
நம்பெரும் சொத்துக்கள் நம்முன்னே கொட்டிய
நாவும் போயிற்று நெஞ்சும் போயிற்று
நம்பிக்கை தந்து நம்முன்னே நின்ற
தீபம் ஒன்றின் திரிதீய்ந்து போனது

கரும்புலி மறவர் பிரிவுக் கவிதையை
ஒருமுறை அவரிடம் பாடிக் காட்டினேன்
பெருங்குரலெடுத்துக் கேவிக் கேவிப்
பெரியவர் அழுதார் நானும் அழுதேன்

மெல்லிய இதயம் மேதினிக்காக
நல்லது சொல்ல நாடிய இதயம்

சங்கத் தமிழின் கவிதைத் தெளிவும்
சைவ சமயச் சித்தாந்த ஞானமும்
எங்கும் பரந்து எழுந்த இலக்கிய
ஏடுகள் கற்று ஏறிய அறிவும்
பொங்குமுணர்வும் பட்டதை முன்னே
பூடகமின்றிப் போட்டு உடைத்திடும்
வெங்களப்பண்பும் கொண்ட வேலனை
இங்குள பலரும் நன்கறிந்திருந்தனர்.

இருப்பினும் எமக்குள் ஒருகுறை எழுந்தது
இவரது ஆழ்ந்த இலக்கிய ஞானத்தை
விருப்புடன் வாழும் இளைய சந்ததி
செவிக்குணவாக்கிடல் அவசியம் என்ற
கருத்துடன் வித்துவான் வேலனை ஊடகப்
பாதையில் திருப்பிடும் முயற்சியில் இறங்கினோம்

நெருப்பினில் எரிந்த நிலத்தினைப் பிரிந்து
நிழல்களைத் தேடி நடக்கின்ற நம்மவர்
கருப்பொருள் காணாக் காவியம் படைத்துக்

கடைநிலை செல்லும் கொடுமையைத் தவிர்க்கவும்
திரைப்படம் ஒன்றே நிலைக்களனாகித்
திறன்கெட்டு மாளும் கேட்டினைக் குறைக்கவும்
திருக்குறள் தொட்டு தமிழ்மொழி இலக்கியம்
தெரிந்திடாதிருக்கும் இழிவினைத் தடுக்கவும்
உருப்படும் உலகினை ஓம்பிடும் நெஞ்ச
ஒளிகொண்ட சந்ததி மிளிர்ந்திட உதவவும்
பொறுப்புடன் வித்துவான் வேலனை அழைத்துப்
புதுத்தமிழோசையைப் பரப்பிட விழைந்தோம்

கிறுக்கர்கள் சிலரின் கிறுக்குத் தனத்தாற்
கிறுக்கு வீழ்ந்தது எங்கள் முயற்சியில்
உறுக்கிட நம்மிடை ஒரு சமுதாயம்
ஒன்றுபடாததால் உண்மை புதைந்தது
பருக்கிய தமிழ்ப்பாலைப் பாதியில் நிறுத்தினோம்
பாவங்கள் ஒருசிலர் அனுதாபம் கூறினர்
இருப்பினும் வேலனின் எழுத்துப் பயணம்
ஓயாது தொடர்ந்து எங்களை நிறைத்தது
இருக்கின்ற போது உதைப்பதும் இறந்தபின்
உருக்கொண்டு பாடிப்பதைப்பதும் தமிழனே

தமிழுணர்வுள்ளோர் தரணிக்குத் தேவை
தாயக விடிவுக்கும் இவர்பணி தேவை
நமதுயர்வறிந்து நல்வழி தெரிந்து
நம்குறை கடியும் நெஞ்சுகள் தேவை
புதுமையின் பெயரால் புற்றீசலாகிப்
புவியினில் கரைதல் அறிவெனல் தவறு
நிதியதே வாழ்வாய் நிலையற்று மாயும்
நாளைய உலகைப் படைப்பதும் தவறு

கடைசியாய் ஐயாவைக் கண்ட கணங்களில்
விடைபெறும் வரிகளாய் வார்த்தைகள் உதிர்த்தார்
"உடல்வலி குன்றி உணர்வின் வலியாற்
தொடர்கிறேன் என்று கூறினார் வேலன்!

நடைபலங்குன்றி நாவும் தளர்ந்து
இடையிடை வந்து வார்த்தைகள் ஒலித்தன.
மடையெனத் தொடர்ந்து பொழிந்த குரலது
மயங்கிப்போவதை உணர்ந்து வருந்தினேன்
கொடையெனக் கருதிய தமிழினைக் கொண்டு
கூத்தனை நாடும் குழந்தையைக் கண்டேன்
அட இது வாழ்வு! அனைவர்க்கும் பொதுவாய்
ஆண்டவன் கொடுத்த மறையிது வென்ற
தொடரினை எண்ணித் துயரினை மறைத்தேன்
தூக்கத்திடையே தொடர்ந்தார் வித்துவான்!

பேசக்களைக்கிறேன் என்றார் வேலன்
பேச்சுக்களைத்ததைப் புரிந்து கொண்டேன்
வேலனின் மூச்சும் இளைக்கக் கண்டேன்
வீசிய புன்னகை தளரக் கண்டேன்
நோயின் கொடுமையைப் பற்றிக் கூறி
நீரும் கவனம் தம்பி என்றார்
பாயும் இரத்த அழுத்தத்தைக் குறைக்கப்
பாடுபடும் எனும் பரிவான அர்த்தத்தில்

பிரியும்போதும் சிரித்தே பிரிந்தோம்
அருமையான நகைச்சுவை ததும்பும்
சிறிய கதையுடன் சிரித்து முடித்தார்
வருகிறேன் என்று பிரிந்தேன் நானும்.

வளர்ந்த எனது மகனைப் பார்த்து
அம்மா அப்பாவைக் கவனியும் என்றார்
எனது மகன் போய் முத்தம் கொடுத்தான்
எல்லோருமாக விடைபெற்று வந்தோம்

நண்பர் சிறீயுடன் நடந்தேன் வெளியே
துன்பம் சுமையாய் என்னுட் கனத்தது

முட்டிக் கனக்கும் முலையுடன் நின்ற
ஒற்றைப் பசுவின் உணர்வுப் பாலினைத்
தட்டிக் கறக்காமல் விட்டு விட்டோமா
தமிழர் வாய்க்குத் தராமல் விட்டோமா
புட்டுப் புட்டுத் தமிழர் வாழ்வின்
பெருமைகள் கேட்காமல் தூங்கி விட்டோமா
ஈழத் தமிழர் மத்தியில் இன்று
ஆழக்கற்று உணர்ந்தவர் சிலரே
வாழும் பொழுது இவரை ஒதுக்கி
வாழும் கொடுமை நமக்கேன் வந்தது
புலம்பெயர் வாழ்வின் இயந்திர இயக்கத்திற்
பொறுமையும் நேரமும் இல்லாத நெருக்கத்தில்
வளந்தரும் நல்ல வார்த்தைகள் கேட்கும்
வாய்ப்பினை இழநது வாழ்ந்து விட்டோமா
கலந்தனில் வீழும் காசின் சத்தமே
கடவுளின் பேச்சாய்க் கருதி விட்டோமா
உளந்தனில் ஒளிரும் உண்மைச்சுடரின்
ஒளிதனைக் காணாக் குருடரானோமா
ஆயிரம் கேள்விகள் என்னைத் துளைத்தன
அனைத்திற்கும் வேலனே காரணமானார்
ஆயினும் எனக்குள் ஆறுதல் ஒன்றின்
சாயல் தெரிந்தது சமாதானம் தந்தது
வாழ்கின்றபோது அவரோடு இணைந்து
நாலையும் பத்தையும் நானும் பகிர்ந்தேன்
நூல்கொண்டு சென்று அவரிடம் தந்து
அவருக்கு நானும் சிறுதொண்டு புரிந்தேன்
நாளொன்று எனக்கும் நிச்சயமண்டு
நானும் கண்களை மூடத்தான்போகிறேன்
சாவென்பதிங்கு புதுமையே யல்ல
சாவிற்குப் பின்பும் வாழ்தலே புதுமை
ஆவிக்கு இல்லை அழிவென்ற உண்மை
அறிந்த தமிழுக்குள் வேலனைக் காண்பேன்

அன்புடன் புலவர்
தமிழவை – இலண்டன்

# வேலனுடைய பெயர் நீண்டநாள் நிலைத்து நிற்கும்

(ஐ.பி.சி. தமிழ் 08.06.03 ஞாயிறு அன்று ஒலிபரப்பிய விசேட அஞ்சலி நிகழ்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியவை)

அன்புக்குரிய நண்பர் வித்துவான் வேலன் அவர்களுடைய மறைவுச்செய்தியை ஞாயிறு காலை தினக்குரல் பத்திரிகை மூலமாக அறிந்து கொண்டேன். நண்பர் பற்றிமாகரன் அவர்கள் சில தினங்களுக்கு முன்னர் என்னோடு தொலைபேசியில் உரையாடிக் கொண்ட வேளை வித்துவான் வேலனுடைய உடல் நலம் அவ்வளவு நன்றாக இல்லை என்று கூறினார். அப்பொழுது பற்றிமாகரன், கூறிய ஒரு விடயம் மனதிலே உண்மையிலேயே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவருக்கு ஒன்றும் நடந்து விடக்கூடாது ஏனென்றால் புலம் பெயர்ந்தவர்களில் தமிழ் வரைமுறையாகப் படித்தவர்களில் அவர் ஒருவர். சில விடயங்களுக்கு நாங்கள் அவரிடம் தான் செல்வோம் என்று பற்றிமாகரன் கூறினார்.அது உண்மையான ஒரு விடயம். வித்துவான் வேலன் அவர்கள் வரைமுறையாகத் தமிழைக் கற்றவர். அந்தத் தமிழைக் கற்றது மாத்திரமல்லாமல் அதனைப் பேணியும் வந்தவர். அதனை ஒரு நவீன சூழலில் பயில்வதற்கு வேண்டிய நடைமுறைகள் எல்லாவற்றிலும் அவரே முன்னின்றவர். அத்தகைய ஒருவருடைய மறைவு உண்மையிலேயே தமிழ் கூறும் நல்லுலககுக்கு ஒரு பெரிய இழப்பென்றே கருதுகின்றேன்.

வித்துவான் வேலன் அவர்களுக்கும் எனக்கும் உள்ள உறவுகள் மிகவும் நெருடலாகவே இருந்தன. கருத்து நிலைப்பட நாங்கள் பல்வேறு தளங்களில் ஒருவரோடு ஒருவர் ஒத்த கருத்தினைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. ஆனால் அவர் அண்மையில் எனக்கெழுதிய இறுதிக் கடிதத்தில் என்னுடைய நூல்களைப்ப ற்றி எல்லாம் எழுதி விட்டு நீங்கள் உங்களுடைய பணியைத் தொடர்ந்து செய்யுங்கள் என்று எழுதிய அந்த எழுத்தை இனி மேல் பெரிதும் போற்றிப்பேண வேண்டிய நிலைக்கு அவரது மரணச்செய்தி என்னைத் தள்ளியுள்ளது.

அவருடைய குடும்பத்தினருக்கு குறிப்பாக அவரது மனைவியாருக்கும் அவரது மகளுக்கும் மருமகனுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் எனதும் எனது குடும்பத்தாரதும் எனது பிள்ளைகளினதும் ஆழந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

வேலனுடைய பெயர் நீண்ட நாள் நிலைத்து நிற்கும்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி
கொழும்பு
இலங்கை

# சாகும் வரை எழுத வைத்தேன்

வித்துவானின் பிரிவுச் செய்தியை தொலைபேசி மூலமாக, அவரது அன்பான மருமகன் சிறிஸ்கந்தராசா தெரிவித்த போது ஒரு கணம் நெஞ்சம் கனத்தது. மனம் இப்போதும் அழுது கொண்டிருக்கிறது. ஒவ்வொரு புதினம் இதழுக்கும் மாதத்தில் இரு முறை தனது கட்டுரைகளை அனுப்பி வைப்பார். அவர் அனுப்பி அது கிடைத்த பின்னர், அவரோடு பேசுவேன். நீண்ட நெடுநேரம் பேசுவார். பலதும் பத்தும் பேசுவார். பத்திரிகை எப்படி அமைய வேண்டும்? வாழ்க்கையைப் பற்றி- இலக்கியத்தைப் பற்றி எல்லாம் பேசுவார். தனக்கு வயது குறைந்தவர்களுடன் மாணவர்களுடன்- எப்படி பேசுவது என்ற தயக்கம் அவருக்கு கிடையாது. ஆனால் அவர் பேச்சில் செக்ஸ்ஸைப் பற்றிப் பேசினாலும் நாகரீகம் பண்பு இருக்கும்.
சில நாட்களுக்கு முன்னர் அவரிடம் இருந்து வந்த தபால் கனமாக இருந்தது. அதற்குள் இவரது கடிதம் ஒன்றும் இருந்தது.
"அன்பான தம்பி இத்தோடு மூன்று இதழ்களுக்குப் போதுமான கட்டுரைகள் உள்ளன. நாளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு குணமாகி எப்போது திரும்புவேன் என்று குறிப்பாகத் தெரியாததால் உங்களுக்காக இருந்து ஒரேயடியாக இவற்றை எழுதினேன். நீர் கேட்டபடி ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும் புதிய அம்சத்தை. ஆரம்பிப்போம் என்ற கடிதத்தில் இருந்தது.
இந்த வயதிலும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகின்ற நேரத்திலும், மூன்று கட்டுரைகளை ஒரேயடியாக இருந்து எழுதி அனுப்பியிருக் கிறாரே என்று துயரம் கலந்த மகிழ்வு என் மனதில்!
ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பியதும், நான் கேட்ட புதிய அம்சத்தை எழுத ஆரம்பித்து விடுவார் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் தபாலில் கனக்க வைத்த கட்டுரைகளைப் போல என் நெஞ்சையும் கனக்க வைத்து விட்டு தமிழர்களை மட்டுமல்ல, தமிழையும் விட்டுச் சென்றுவிட்டார்.
அரைக்காற் சட்டை போட்டுக் கொண்டு, பள்ளிக் கூடத்திலே படிக்கின்ற சிறு வயதுக் காலத்திலே, அவரது சொற்பொழிவை நான் படித்த அமெரிக்கன் மிசன் பள்ளியிலே கேட்டு மயங்கியவன். பின்னர் ஈழநாடு , கொழும்பில் லேக்கவுஸ் "தினகரன் " நாளேடுகளில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய காலங்களில் அவரோடு இருந்த

தொடர்புகள் மனதோடு வாழ்கின்றன.
1993ம் ஆண்டு அவர் லண்டனுக்கு முதல் தடவையாக வந்திருந்தார்.
அவரை அவரது ஒரே மகளான மாதினி சிறிஸ்கந்தராசா வீட்டில்
சந்தித்து உரையாடினோன். பின்னர் பல சந்திப்புக்கள்.
அப்போது "ஈழகேசரி" என்ற மாதம் இருமுறை பத்திரிகையை நடாத்திக்
கொண்டிருந்தேன்.
1993ஆம் ஆண்டு தீபாவளி இதழுக்குச் சிறப்புக் கட்டுரை
கேட்டிருந்தேன். "அன்று புராணம் இன்று சரித்திரம்" என்று அவர்
எழுத்தில் தந்தது ஈழகேசரியில் பிரசுரமானது இன்றும் நினைவில்
நிற்கின்றது. அன்று அரக்கர்கள் செய்தவை புராணங்கள் ஆயின. இன்று
சிங்கள அரக்கர்கள் செய்தவை சரித்திரங்கள் ஆகின்றன.
முன்னர் அழித்த அரக்கர்களுக்கு இதுவரை தீபாவளி கொண்டாடி
னோம். அழியப் போகும் அரக்கர்களுக்கு இனித் தீபாவளி
கொண்டாடுவோம்.
"பிரபாகரன் மனிதனல்ல "அவதாரம்" என்று அவர் ஈழகேசரி இதழில்
எழுதிய வரிகள் வைர வரிகள்.
கடைசி காலத்தில் அவர் எழுதியது "புதினம்" பத்திரிகையில். அவரை
எழுத வைத்துக் கொண்ருக்கின்றேன் என்பதை எண்ணிப் பெருமைப்
பட்டுக் கொண்ருக்கிறபோது யார் கண்பட்டதோ தமிழர்ளையும் தமிழர்
தலைமையையும் தமிழையும் உயிராக நேசித்த அவர் மறைந்த
விட்டார். ஈழத் தமிழர்களுக்கு ஒரே ஒரு வித்துவான் தான் ! அவரது
இதமான நகைச்சுவை கலந்த பேச்சை இனிக் கேட்க மாட்டோம்.
அவர் கடைசியாக எழுதிய மூன்று கட்டுரைகளில் ஒன்று மட்டும்
அடுத்த புதினம் இதழில் வெளிவரும். அவரது நான்கு புத்தங்கள்
அச்சில் உள்ளன. அவரது மருமகன் தமிழறிஞர் சட்டத்தரணி
சிறீஸ்கந்தராசா நூல்கள் வெளிவருவதற்கான முழு ஏற்பாடுகளையும்
தமிழ் நாட்டில் செய்து முடித்து விட்டார்.
அவர் எழுத்துக்களை எங்களுக்கு விட்டு சென்றிருக்கிறார்.
முதுமையிலும் இளமையான தனது எழுத்துக்களால் வாசகர்களைக்
கவர்ந்தவர் அந்த எழுத்துக்கள் மூலம் அவரை அஞ்சலிப்போம்.
ஈழத்தில் வாழ்ந்த இன்னுமொரு மாமனிதர் இந்த வித்துவான் வேலன்!
அவர் பிரிவால் வாடும் அவரது மனையாருக்கும் குடும்பத்தினருக்கும்
புதினம் வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்கள்.

**ஈ. கே ராஜகோபால் (ஆசிரியர் புதினம்)**

## காலம் காலமாக எம்மோடு வாழப் புறப்பட்டு விட்ட
## வித்துவான் வேலன் ஐயாவுக்கு
## என்றும் தொடரும் எம் அன்பான வணக்கம்

தமிழீழத் தமிழுலகின் தலையாய தமிழறிஞர் - புலம் வாழ் தமிழீழ மக்கள் தமிழின் உருவாய்க் கண்டு உறவாடிய உத்தமர் - தமிழீழ மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர் நெஞ்சமது விடுதலைத் தலைவனையே போற்றி நிற்கும் என்பதற்கு உதாரணமாய் உலகத் தமிழினத்தின் தலைமை தமிழ் ஈழத்தில் மையம் கொண்டு விட்டது என்று ஏட்டில் பொறித்த பெருந்தகையாளர்.

ஈழத்தமிழர்க்கு இனியதொரு பொற்காலம்
தூரத்திலில்லை துணிவோடு சொல்கின்றேன்
வேழத்தை வீழ்த்தி விடியலை நோக்கியெழும்
வேங்கைகளின் போராட்ட வேகத்தால்
ஈழம் மலரும் - இனிய பொற்காலம் மலரும்

எனப் புலத்தில் எதற்கும் அஞ்சாது பாட்டிசைத்த தமிழீழத்து பாரதி எங்கள் வித்துவான் வேலன் ஐயா அவர்கள் காலமாகி விட்டார்.

செத்து விட்டதாக நான் செப்பவில்லை. காலமாகக் கனன்று எழும் சக்தியைப் பெற்றுவிட்டார் என்றே குறிப்பிடுகிறேன். காரணம் கலைக்களஞ்சியத் தொகுப்பாசிரியனாகப் பணி புரிந்தமையைப் பாராட்டி சிறிலங்காவின் இந்துக் கலாச்சார அமைச்சு பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திட அழைத்த பொழுது வித்துவான் வேலன் அவர்கள் எழுதிய பாட்டு அன்றே சாவினை வென்றிடும் மனிதராக அவரை மாற்றி விட்டது.

அகதி களாகியே தமிழர்கள் அலையவும்
அன்னந்தண்ணி இல்லாதவர் சாகவும்
சகதிகள் சேறுகள் தாண்டிவந்தவர்
தாண்டிக் குளத்திலே செத்து மடியவும்
அகமுருகியென் ஆவி கலங்கிட

அரச கௌரவம் யானிதை ஏற்பனோ
சகமு முணர்ந்திடும் சான்றோர் உணர்வரால்
சாவினை வென்றவன் வேலன் அறிவையோ

எனப் பாட்டெழுதி பட்டத்தைப் பொன்னாடையை ஏற்க மறுத்த அன்றே வித்துவான் வேலன் என்னைப் பொறுத்த மட்டில் சாவற்ற சரித்திரத்தைத் தனதாக்கி விட்டார். இப்படி எத்தனையோ உதாரணங்கள் அவர் தன்னை மண்ணோடு அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களோடு பிணைத்து மண்ணின் வரலாறாய் மக்களின் வரலாறாய்த் தன் வரலாற்றை மாற்றிக் கொண்டமைக்கு எடுத்துக் காட்ட முடியும்.

தமிழினதும் சைவசித்தாந்தத்தினதும் பேரறிஞர் வித்துவான் வேலன் அவர்கள்

நாமார்க்கும் குடியல்ல வென்றான் - இந்த
ஞானத்தை வெல்லும் தமிழ் தந்தான் - அந்த
ஞானம் நமக்கின்றிருந்தால் - தமிழ்ச்
சாதி தலைநிமிர்ந்து நிற்கும் - சைவ
மேன்மைத் தமிழ் உலகை ஆளும்

எனச் சுவிசில் நடந்த இந்துக் கலாச்சார மகாநாட்டில் இடித்துக் கூறிய பொழுது சைவம் செத்த பின்னர் சிவலோகம் செல்வதற்கான வழிகளைக் கூறவில்லை வாழும் பொழுதே அடிமைத் தளையறுக்க உழைத்து நன்மைத்தனத்தை - தன்னலமற்ற பேரன்பை - சிவத்தை இகத்திலே நிலைப்படுத்தி சிவபூமி காண்பதற்கான கட்டளைகளைத் தருகிறது என்ற உண்மை பலருக்கு விளங்கியது.

தமிழ்க்கல்வியின் வடிவான வித்துவான் வேலன் அவர்கள் கல்வியைப் புகழ்ந்து சொல்வார்

கற்று நீ தேறி விட்டால்
கல்வியால் பயனென் என்பார் - நாலு

காசல்லோ வேண்டு மென்பார்
கல்வியைக் காசாய்க் கண்டு
கடவுளை வணங்கு மிந்தப்
புல்லரை எண்ணி எண்ணிப்
புழுங்கிநான் சிரித்ததுண்டு

எனப் பாடி இன்றைய தமிழன் பட்டத்திற்காய்ப் பதவிக்காய்க் காசுக்காய்ப் படிப்பதே கல்வி என்று வாழும்நிலை கண்டு தான் மனம் புழுங்கிச் சிரிப்பதாக நகைச்சுவையாகக் கூறுகின்றார். இங்கு பாரதி கூறிய

முன்ன நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக்கல்வி பயின்றுழல் பித்தர்கள்

என்ற கவிதாப் பிரகடனத்தின் மறுதரிசனத்தைக் காண்கின்றோம். ஆம். வித்துவான் வேலன் அவர்களுக்கும் பாரதிக்கும் இடை கருத்தில் - மொழிநடையில் - நெஞ்சுறுதியில் - யாருக்கும் தலைவணங்காத் தன்மையில் அஞ்சாது இடித்துரைக்கும் வண்மையில் - சமுக பொருளாதார அரசியல் ஆன்மீக விடுதலை உணர்வில் நிறையவே ஒற்றுமைகள் உண்டு. என்னைப் பொறுத்த வரை தமிழீழ இலக்கிய உலகின் பாரதியாகவே வித்துவான் வேலன் அவர்கள் வாழ்ந்து இன்று வரலாறு ஆகிநிற்கின்றார்.

இந்நேரத்தில்

தீரத்தைத் துணிவைக் கொண்டு
தீமையை அடித்து வீழ்த்தியெம்
பாரத்தைச் சுமந்த தோளைப்
பாடையிற் சுமந்தோம் நாங்கள்

என வித்துவான் வேலன் அவர்கள் மாமனிதர் குமார் பொன்னம்பலம்

அவர்கள் மறைவின் பொழுது எழுதிய கவி வரிகள் நினைவுக்கு வருகிறது. சட்டத்துறையினுடாக மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் வெளிப்படுத்திய அதே தீரத்தை தீமையை அடித்து விழுத்தும் செயற்பாட்டை தமிழ் ஆன்மீகம் என்னும் வாழ்வின் இருதுறைகளினுடாகவும் வாழ்நாள் முழுவதும் வெளிப்படுத்தியவர் வித்துவான் வேலன் அவர்கள். இறுதியாக ஐயா வேலன் அவர்களே நீங்கள் கூறியது போல தத்துவம் உணர்ந்ததாலே சாவினை உணர்ந்து கொண்டோம்.

நித்திரை கொள்ளுகின்றேன்
நீண்டநாள் உழைப்பின் பின்னர்
கத்தியேன் குழப்புகின்றீர்
காலத்தை வெல்ல மாட்டீர்

என்று நீங்கள் கூறுவது கேட்கிறது. காலத்தை வெல்ல எங்களால் முடியாது என்பது உண்மை தான். ஆனால் உங்களின் எழுத்து அந்த எழுத்தில் இருக்கும் சத்திய வேட்கை அந்த சத்திய வேட்கையில் இருந்து பிறந்த உங்களின் பேச்சுக்கள் இவை எல்லாம் என்றோ காலத்தை வென்று விட்டனவே. இதனால் தோற்றவன் காலன் வென்றவர் வித்துவான் வேலன். எங்கள் தமிழீழ மக்களின் வரலாற்றின் வனப்பாகச் சிந்தனைச் செழிப்பாக தமிழீழத் தமிழின் இனிமையாக சைவத்தின் பெருமையாக நீங்கள் காலங்களின் மேல் கொலு வீற்றிருக்கும் அந்த அற்புதமான கோலத்தைக் கண்டு உங்களுக்கு இன்று போல் என்றும் கை கூப்பி சிரம் தாழ்த்தி அன்பான தமிழ் வணக்கங்கள் கூற வாழ்வோம்.

**சூ. யோ. பற்றிமாகரன்**
தமிழ் எழுத்தாளர் - பத்திரிகையாளர் - ஆய்வாளர்
ஒக்ஸ்வேர்ட்

**வித்துவான் வேலன் அவர்களது மறைவின் மூலம் ஈழத்தமிழினம் தனது மூத்த மகன்களில் ஒருவரை இழந்து நிற்கிறது.**

வித்துவான் வேலன் ஒரு முதிர்ந்த பண்பாளர், சிந்தனை தோய்ந்த எழுத்துக்களைச் செதுக்கிய சிற்பி, மாறுபட்ட கருத்துக்களையும் நயத்துடன் முன்வைத்த வித்தகர். விவாதங்களின் போது தளும்பாத நிறைகுடப்பண்பு அவரது திறனுக்கு அரணாக அமைந்தது.

ஐ.பி.சி தமிழ் வானொலியின்பால் வற்றாத அன்பு கொண்டவராக அவர் திகழ்ந்தார். அவரது பல நிகழ்ச்சிகள் எமது வானாலியை அலங்கரித்திருக்கின்றன.

அவரது தீர்க்கமான குரலும் அழுத்தமான சிந்தனைகளும் ஐ.பி.சி தமிழ் நேயர்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

அப்பெருமகனாரின் நினைவுகளுக்கு ஐ.பி.சி தமிழ் தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அவரது ஆன்மா நின்று வாழும் என நெஞ்சம் விம்ம அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் கரங்களை இறுகப் பற்றி அவரது நீங்கா நினைவுகளுடன்...

ஐ.பி.சி தமிழ்
**சீ. சிவாரஞ்ஜித்**
பணிப்பாளர்
அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தமிழ்
இலண்டன்

# தாயகம் வணங்கும் தமிழாசான்

தமிழால் தமிழனாய் தலை நிமிர்ந்து நின்ற தனிப் பெரும் தமிழ்மகன். தாயகம் தலைவணங்கும் தமிழ் ஆசான், தமிழ் ஒலிக்கும் இடமெங்கும் தன்னைப் பிரசன்னப்படுததிக் கொள்ளும் தமிழ்ப் பெருமகன் வித்துவான் க.ந. வேலன் அவர்கள் பெயரை சிறுவயதில் கேள்வியுற்றதிலிருந்து பார்க்க வேண்டும் என்ற துடிப்பு என்னுள் வளர்ந்தது பருவம் தெரிந்த வயதில் பார்க்க முடிந்தது.

பேச முடியவில்லை. தூர நின்றே பார்த்தேன். அவரின் அருந்தமிழ்ப் பேச்சைக் கேட்டு இரசித்தேன். பட்டிமன்றம், கவியரங்கம், அரசியல் மேடைகள் என்று அந்த தமிழ் ஆசானைக் கண்ட நாள் முதல் அவரோடு நேரே பேசவேண்டும், அவரின் தமிழ்த் தடாகத்தில் நீச்சலடிக்க வேண்டும் என்று ஆதங்கப்பட்டதுண்டு.

தாயக மண்ணில் அது அசாத்தியமாகவே போனது. ஆனால் புலம் பெயர் வாழ்வில் கடந்த சில காலம் அந்தத் தமிழ்க் கடலிலிருந்து நான் சார்ந்த ஊடகத்துறைக்கு அவர் சேவையைப் பெறமுடிந்தது என்பது எனக்குத் வானொலித்துறையில் கிடைத்த மிகப் பெரும் மகுடமாகவே கருதுகின்றேன்.

அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம்- தமிழ் நடாத்தும் நிகழ்ச்சிகளில் குறிப்பாக, "இன்றைய விருந்தினர்", "இன்று ஒரு தலைப்பு" , "புலம் பெயர் வாழ்வியல்" "முத்தமிழ் பந்தல்" போன்ற நிகழ்ச்சிகளிலே வித்துவான் க.ந. வேலன் அவர்கள் பங்கு பற்றி சிறப்பித்துக் கொண்டார்.

நேரத்தைப் பொருட்படுத்த மாட்டார், அதிகாலை வேளையா? நேரம் பிந்திய இராப்பொழுதா? கேட்டதற்குப்பதில் வழங்கி தெளிவூட்டி விட்டு குறித்த நேரத்திற்கு நிகழ்ச்சி ஒலிப்பதிவுக்கும், நேரடி நிகழ்ச்சிகளுக்கும் அவர் தயாராகி இருந்தமை, என்னை எத்தனையோ தடவைகள் பிரமிப்பில் ஆழ்த்தியிருக்கின்றன.

தமிழ் மொழி பேச்சில் எழுத்தில் எமக்கேற்படும் சந்தேகங்களைத் தயக்கமின்றி கேட்டுத் தெளிவுறத்கூடிய ஒரு தமிழ்க்களஞ்சியமாக விளங்கியவர் வித்துவான் வேலன் அவர்கள் புலம் பெயர் நாடுகளில் தமிழ் மொழி உபயோகம் வளர்ச்சி பற்றி நான்

நடாத்திக் கொண்ட வானொலி நிகழ்ச்சியிலே கருத்துக்கூற வருகை தந்த வித்துவான் க.ந. வேலன் அவர்கள் " தமிழை வீட்டில் புழங்க வேண்டும்" என்றார். இலண்டன் வாழ் தமிழர்களின் இல்லங்களில் தமிழ் புழங்கப்படுவதில்லை. பிரித்தானியா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளிலே தமிழர்களின் இல்லங்களின் தமிழ் புழங்கப்படுகிறது என்றும் விளக்கியிருந்தார்.

எனவே அன்னாருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக வீட்டிலும் நாம் எம்மவரைச் சந்திக்கும் போதும் தமிழில் பேசிக்கொள்வோமா? இதனை நடைமுறைப்படுத்துவது வித்துவான் க.ந .வேலன் அவர்களை என்றென்றும் எம்மனங்களில் நிலை நிறுத்தி வைப்பதாக இருக்கும்.

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் சேவையாற்றுவதில் தன்னை வாழ்நாளின் இறுதிக்கட்டம் வரை அர்ப்பணித்திருந்த தாயகம் தலைவணங்கும் தமிழ் ஆசான் வித்துவான் க.ந. வேலன் அவர்கள் பெயர் தமிழ் வாழும் வரை வாழும் என்பதே உண்மை

**எஸ். கே. ராஜென்**
ஒலிபரப்பாளர்

அனைத்துலக ஒலிப்பரப்புக்
கூட்டுத்தாபனம் - தமிழ்
இலண்டன்

உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவ முன்னேற்றச் சங்கம் (U.K.)

சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை

# Saiva Munnetta Sangam (U.K.)

*"Community Service through Hindu Concern"*

**2 Salisbury Road, Manor Park, London E12 6AB.**
Tel: 020 8514 4732 Fax: 01268 561805
**Bankers:** Lloyds TSB Bank Plc. & National Savings Bank
Registered Charity No: 29208

26 th Year
Management Committee

*President &Trustee*
Mr. V. R. Ramanathan
01268 766624

*VicePresident &Trustee*
Mr. T. Kanagasabai
020 8550 3654

*General Secretary &Trustee*
Mr. S. Anandathiyagar
020 8924 8492

*Treasurer &Trustee*
Mr. S. R Pasupathy
020 89259611

*Trustees*
Dr. V. Balasegaram
Mr. W. Nagaratnam
Mr. V. Sellathurai
Mr. C. Sithamparapillai
Mr. N. Sivarasan

*School Secretary*
Mrs. P. Uthamakunan

*Religious Secretary*
Mr. R .Pathmanathan

*SocialService Secretary*
Mr. V. C. Vamanananthan

*Publication Secretary*
Mr. Siva. Asokan

*Building Project Secretary*
Mr. G. Parameswaran

*Membership Secretary*
Mr. T. Jeganathan

*Assistant Treasurers*
Mr.J.Gunasegaram
Mrs. B. Linganandan

*Committee Members*
Mr.Saravanan Anandathiyagar
Mr.S.Arputhananthan
Mr. M Narkunthayalan
Mr.D.Rabindaramohan
Mr. K. Sivagurunathapillai
Mrs. V. Kanagenthran
Miss. K Subramaniam
Mr.S.Thamboo

## வித்துவான் வேலன் ஐயா அவர்கட்கு

### சைவ முன்னேற்றச் சங்கத்தின் அஞ்சலி வணக்கம்

ஈழம் யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இலண்டனை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமாகிய தமிழ் அறிவுக்கடல் வித்துவான் க.ந.வேலன் ஐயா (திரு. க.ந.இரத்தினவேல்) அவர்கள் சிவபதமெய்தியமை எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியது.

உலகெங்கும் பரந்து வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் வரலாறுகளையும், அவலங்களையும் உலகத்தவருக்கு பத்திரிகை வாயிலாகவும் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆணித்தரமாக எடுத்துக்கூறினார். அன்னார் சிவபதமெய்தியமை உலகத் தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

தமிழ் மொழியின் மறுமலர்ச்சியையும், தனித்துவத்தையும், மேன்மையையும் தமிழ் மக்கள் உள்ளங்களில் உணரவைத்து தமிழ் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் வித்துவான் வேலன் ஐயா ஆவார். அவர் எமது சங்கத்திற்கும் கலசம் காலாண்டிதழ் சஞ்சிகைக்கும் பல அறிவுரைகளை அவ்வப்போது வழங்கி வந்தமையை யாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூறுகின்றோம்.

அன்னாரின் ஆன்மா ஆடவல்லான் திருப்பாதங்களின் கீழ் என்றென்றும் மகிழ்ந்திருக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும் உலகத் தமிழ் மக்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வ.இ.இராமநாதன்
வ.இ.இராமநாதன்
தலைவர்

14-06-2003




சிவதொண்டன் நிலையம் (U.K)

Sivathondan Nilayam(U.K)

48A, Deburgh Road, Wimbledon,

London SW19 1DU

Tel: 020 8540 0104, 07940 114 059


## சிவயோக சுவாமிகள் பக்தன் - வித்துவான் வேலன்

வித்துவான் வேலன் ஐயா அவர்களது மறைவுச் செய்தியைத் திரு முருகானந்தன் மூலம் அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். அவரது இல்லத்திற்கு நேரில் சென்று எனது அனுதாபத்தையும் மரியாதையையும் தெரிவிக்க எனது உடல்நிலை இடம் தராத நிலையில் அவரது மருமகன் திரு சிறீக்கந்தராசாவை தொலை பேசியில் தொடர்பு கொண்டு எனது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தியதனால் சிறிதளவு ஆறுதல் அடைகின்றேன்.

வித்துவான் வேலன் ஐயா அவர்கள் தமிழ் மக்களின் பெருமதிப்புக்கும் பெருமைக்கும் உரிய கல்விமானாகவும் தொண்டனாகவும் வாழ்ந்து வந்தார். அவரது துணிச்சலான மேடைப்பேச்சுக்களும்பத்திரிகைக் கட்டுரைகளும் ஈழத் தமிழர் வரலாற்றில் தனியிடம் பெற்றவை. அவர் வித்துவான் பட்டத்திற் கேற்ற தமிழ் இலக்கிய விடயங்களுடன் மட்டுப்பட்டு விடாமல் சமயம், ஆன்மீகம் போன்ற விடயங்களிலும் தனது எழுத்து பேச்சு வன்மையினால் மக்களுக்குத் தொண்டுகள் செய்தார்.

அவர் சிவயோக சுவாமிகளின் பெரும் பக்தன். சுவாமிகளின் போதனை களையும் தத்துவங்களையும் "சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞானவிளக்கு" என்னும் புத்தகம் மூலம் வெளியிட்டுப் பெருமதிப்புப் பெற்றார். லண்டனில் சிவயோக சுவாமிகளின் பக்தர்கள் சிவதொண்டன் நிலையம் (U.K) என்னும் அமைப்பை ஆரம்பிக்கப் பெரும் உறுதுணை யாக இருந்தார். 12.09.1993 இல் கிழக்கு இலண்டனில் நடைபெற்ற சிவதொண்டன் நிலையம் (U.K) இன் தொடக்கவிழாக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சிறப்புற நடத்தியதுடன் இந்த நிலையத்தின் போசகராகவும் பொறுப்பேற்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து சிவதொண்டுகளாற்றினார்

அவரது மறைவு ஈடு செய்ய முடியாதது. அவர் மோட்ச உலகில் நடராசப் பெருமான் திருவடிக்கீழ் இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மு. ஆறுமுகம்
முன்னாள் தலைவர், சிவதொண்டன் நிலையம் (U.K)

## ஆசானுக்கு மாணவனின் அஞ்சலியான ஆர்வங்கள்

வேலனை நினைவு கூரும்
வித்தியாசமான ஒரு தொகுப்பு
இது வேறுபட்ட ஓர் அமைப்பு
உணர்வையும் கருத்தையும்
உச்சிமேல் கொண்டு
உருவத்தைப் புறம் தள்ளும் முயற்சி
புதியதாய் எளியதாய்
போய்ச்சேர வேண்டும் என்பதாய்
எண்ணியதே அடிப்படை நோக்கம்
சிறி அன்று ஐ.பி.சியில் தெளித்த
உறைக்கின்ற உண்மைகளால்
உருவான பதார்த்தம்
எங்கள் சமூகத்தை
உருப்படியாய் உணரவைக்கும்
யதார்த்தம்

வேலனைக் காலந்தள்ளி
கவர்ந்த காலனுக்கு நன்றி
நாம் கொஞ்சமேனும் காப்பாற்றினோம்
அவன் தமிழை அள்ளி
எத்தனையோ ஊடகங்கள்
வரிசையாய் ஒலிவாங்கிகள், பெருக்கிகள்
அத்தனையும் முயன்றதென்ன
அலைவரிசையாய்
கனவுத் தயாரிப்புகளும்
கால் மேல்கால் போட்டு
தூங்கிக் கொண்டே
தொடர்ந்து தூங்குகின்ற
தாலாட்டுகளும்

அன்று வகுப்பினில் அவன் சொல்லி உருவாக்கி
இன்று ஒரு குமரன் இருக்கிறான்
இன்னும் எத்தனை பேர் இப்படியாய்
இருப்பவரைத் தருபவனை எத்தனை நாள்
ஏற்றுக் கேட்டோம்

பண்டாரநாயக்காவைப் பாராட்டிய
அவன் கவிதைக்கு
எண்டாலும் சரியில்லை என்று விமர்சித்தேன்
இருந்தாலும் அங்கு ஆசிரிய விருத்தத்தின் இறுதிவரி
தூங்குகின்ற தமிழா நீ தூங்கு தூங்கு
எழுபத்தியொன்று இரண்டாயிரத்து மூன்றுக்கும்
பொருத்துகின்ற புதுமையது வியந்து நிற்கிறேன்

தமிழா நீ தமிழைப் பேசு, எழுது
அன்றைக்குச் சொன்னது
இன்றைக்கு புலம் பெயர்வில்
என்ன தீர்க்க தரிசனம்

அப்பா மகனே என அன்புடன்
மாணவரை அழைத்த பண்பு
இந்நாட்டில் எம் குழந்தைகள்
தம் ஆசிரியரை பாராட்டுகையில்
அந்நாளில் நம் நாட்டில் இதை
ஆற்றிய அருந்தகையை
இந்நாள்வரை புரியாததிருந்தோமே

தீர்க்கதரிசிகள் சொந்த நாட்டில்
மார்க்கம் தந்தவராய் மதிக்கப்படுவதில்லை
என்ற பைபிளின் வாசகம்
சித்தாந்தப் புலவனுக்குப் பொருந்திப் போவது
வேடிக்கையில்லையா அல்லது வேதனைதானா

அவனால் உருவான அடித்தள நன்றியும்
பின்னால் என்னாகும்  எனப் பயப்படாச் துணிச்சலும்
எத்தைபேரை விட நெருங்கியிருந்தேன் என்ற
நெஞ்சு நிறை பெருமையும் பாசமும்
என்னைப் பேச வைத்தன
பெயர் சொல்ல வைத்தன
நாளை செய்ய வேண்டியதை
இந்த நாலு குறளில் எழுத வைத்தன

வேலன் குறள் இதை நான்
விளம்பிப் பாடினேன்
விரிக்க அவன் புகழ்ந்தான்
நானும் தமிழன் இனிஏது நகைசெய்வார்
தனக்கெனத் தேடியலைந்தே தான்

தமிழாளும் தகைஞர்க் கெல்லாம் வள்ளலானான்
அமிழ்தத்தை அள்ளியள்ளிக் கொடுத்து

வேலன் வழியே தமிழ்காக்க வித்திடுவோம்
ஊடகமும் நாமும் இணைந்து

அன்புடன் அவன்தாள் பணிந்து
**குமரன்**

திருக்கோணேசர் துணை
ஓம் சாய்ராம்

**அன்று தேம்ஸ்சில் வீசிய தென்றல்**
**இன்று தேம்ஸ்சில் கலந்து விட்ட தமிழ்த்தென்றல்**

வித்துவான் க.ந.வேலன் ஐயாவின்
கம்பன் கழக நினைவுகளும்
திருமலை பாலா இராமலிங்கனாரின்
தொடர்புகளும்
அதிகாலை வேளையிலும்
அழைத்திடுவேன்
என்ன தம்பி பாலாவென விழித்தெழுவார்
நித்தமும் நடந்திடும் உரையாடல்
இடையிடையே கூறிடுவேன்
எனது சில கிறுக்கல்களை
மௌனப்புரட்சி செய்த
அந்த மகானின் வாசகம்
இதுவும் கவிதையோடா

1983இல்
ஈழத்தில்
அன்னை பத்திரகாளியின் தேரோடும் வீதியிலே
வித்துவான் வேலனாரின் தமிழ்ப்படையில்
தேவன் ஐயா சிவராமலிங்க மாஸ்டர்
பேராசிரியர் இராதாகிருஷ்ணன்
அவர்களுடன் ஜெயராசனும் கூடவே!

1993இல்
இலண்டனில்
ஈஸ்ட்ஹாம் முருகனின் தேரோடும் வீதியிலே
வித்துவான் வேலனைக் கண்டு
தமி!ழ்ப்பித்தினால் காதல் கொண்டேன்

அள்ள அள்ளக் குறையாத இலக்கிய ஊற்று
அருகினிலே இருந்த போது தெரிந்தது ஊற்று
அவர் எம்முள் விதைத்தது தமிழ் நாற்று
அது என்றும் மணம் வீசிடும் தமிழ்க்காற்று

சித்தங்கள் இருவர் மத்தியிலே
சிக்குண்டு கிடந்தேன் சிலகாலம்
இருவரும் தனிவழி சென்றவர்கள்
இருவரும் தமிழ்வெறி கொண்டவர்கள்
தம்பியைத் தலைவனாய்க் கொண்டவர்கள்
இது காலத்தின் கட்டாயம் என்றவர்கள்

வேலனாரின் ஒரு புறத்தைக்
கண்ணுற்றோர் பலர்
வேலனாரின் மறுபுறத்தைக்
கண்ணுற்றோர் ஒரு சிலர்

என் உள்ளமதில் ஊற்றெடுக்கும்
எண்ணப்பதிவுகளை அழகு தமிழ் நடையில்
சிறுமடலில் தொடர்ந்தும் தந்துவிட
உந்தன் ஆசியை வேண்டிடும்

**திருமலை பாலா இராமலிங்கனார்**
திருக்கோணமலைக் கம்பன் கழகம்
பிரித்தானியக் கம்பன் கழகம்

# காலன் கவர்ந்த வேலன் - ஓர் இலக்கியச் சோலை

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

கடந்த நூற்றாண்டின் அறுபதுகளிலே மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே ஆசிரியராகத் தொண்டாற்றியவர் வேலன் ஐயா அவர்கள். நான் அவரிடம் ஒரு நாளேனும் கற்கவில்லை. ஆயினும் அவருடைய இலக்கியத் திறமையை அன்றே கண்டு வியர்ந்தவன் . அவரை எப்போதும் சற்றுக் குழப்பம் விளைவிக்கும் மாணவர் அமைந்த வகுப்பிற்கே படிப்பிக்க விடுவார். காரணம் கல்வி கற்பிப்ப திலே மட்டுமன்றித் தன் கற்பிக்கும் ஆளுமையிகாலே குழப்பம் செய்யும் மாணவர்களை அடக்கி வைக்கும் திறமை இவரிடம் இயல்பாகவே அமைந்திருந் தமையே. இவ்வாறிருந்த அவருடைய இலக்கியச் செழுமையே பிற்காலத்லே அவர் பல துறையிலும் தன் எழுத்தினைப் பதித்த செயற்பாடு.

சிலர் ஐம்பெருங்காப்பியங்கள் போன்ற பழைய இலக்கியங்களிலே திறமை பெற்றிருப்பர். வேறு சிலர் பக்தி இலக்கியங்களிலே செழுமை அடைந்திருப் பார்கள். இன்னும் சிலர் புதிய இலக்கியங்களிலே சிறப்பான அறிவு பெற்றிருப்பர். ஆனால் இவரோ யாவற்றிலும் திறமையும் செழுமையும் அறிவும் பெற்றிருந்த ஞானி இவை மட்டுமா.... பக்தி நெறியும் சைவ சித்தாந்தமும் அறிந்த இவரிடம் பொதுவுடமை சார்ந்த இலக்கியப் புலமையும் மிகுந்திருந்தது. வழமையான இலக்கிய விற்பனர்கள் வரலாற்றை அறிந்திருப்பதில்லை. ஆனால் வேலன் ஐயா அவர்கள் வரலாறும் தெரிந்த ஓர் அரசியல்வாதி. சமையலுக்கும் நூல் சமைத்த சாதனையாளன். இவருடைய வரலாற்று அறிவின் உன்னத வெளிப்பாடே. ஈழத்தமிழரின் வரலாற்றை நெறிப்படுத்தி எழுதிய நூல் . சோலை என்னும் போது அங்கு பல வகையான செடிகள் இருக்கும. பல வண்ணப் பூக்கள் பூக்கும் அதனாலேயே வேலன் ஐயா அவர்களும் ஓர் சோலை. எத்தனை வகையாக பிரித்தாலும் அத்தனை வகையிலும் மணம் வீசும் அறிவாளி. அதனால் அவர் ஓர் இலக்கியச் சோலை.

இலக்கியம் அறிந்த மனிதரை இன்னாரென்று உலகம் அறிய வைப்பன ஒருவர் தன்னுடைய காலத்திலே வாயினூடாக வெளிக்கொணரும் இலக்கியப் பேச்சுக் கள். இலக்கியவாதி ஒருவருடைய காலத்தின் பின்னரும் பெயர் சொல்லிப் பெருமை கூற வல்லன அவர் எழுதி வைக்கும் நூல்களே. வேலன் ஐயா அவர்களின் பெருமைக்கு ஏற்ற அளவிலே அவருடைய நூல்கள் வெளிவராது பெருங்கவலையே. ஆயினும் இன்றும் அச்சிலே சில உள்ளன என்றும் விரைவிலே வெளிவரவிருக்கின்றன என்றும் அறியும் போது அவர் பெயர்கூற இன்னும் பிள்ளைகள் பிறக்கவுள்ள உள்ள நிறைவொன்று. ஐயாவின் ஆன்மா ஆண்டவன் அடி இணையவும் அவரை இழந்து வருந்தும் அவருடைய துணைவியார் அமைதி பெறவும் அவர்பிரிவாலே துயருறும் அனைத்து உறவுகளும் தம் துயர் களையவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வானாக.

**கவிஞர் கந்தையா இராஜமனோகரன்**

*பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம்*
The Federation of Saiva (Hindu) Temples, U.K.
4a, Clarendon Rise, Lewisham London SE13 5ES
Tel: 020 8318 9844

## "வணங்காமுடி" வித்துவான் க.ந. வேலன் அவர்கள்

எமது ஈழத்தமிழ் அறிஞர்களின் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து உலகத்தமிழ் மக்கள் போற்றும் வகையில் வாழ்ந்தவர் அமரர் திரு .க.ந. வேலன்அவர்கள் ஆவார். இரத்தினவேல் என்னும் பெயருடைய அவர் இரத்தினம் போன்று பிரகாசித்து நன்மைகளைச் செய்தவர். அத்துடன் வேல் போல் ஆழமாகவும், அகலமாகவும், கூர்மையாகவும் உடைய பேரறிவு படைத்தவர். ஈழமக்கள் சார்பாக எங்கும், எச்சந்தர்ப்பங்களிலும் சிம்மக்குரல் கொடுத்தவர்களில் அமரர் வேலன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

நான் அவருடன் தொடர்பு கொண்ட சில சமயங்களில் அவருடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கத் தயங்கினேன். காரணம் யாதெனில் அவர் ஒரு வணங்காமுடி என்பதாகும். ஈழமக்களின் ஜோதியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்த தீபம் திடீரென அணைந்து விட்டது. இவ்விழப்பு ஈழ மக்களாகிய எமக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் எனினும் இறைவனது நியதிப்படி அவர்கள் சிவபதம் பெற்றுவிட்டார்கள்.

எனவே அன்னாரது மனைவி, மகள், உற்றார் உறவினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரர் வித்துவான் க.ந வேலன் அவர்களது ஆத்மா எல்லாம் வல்ல அருணாசலப்பெருமானது பாதார விந்தங்களில் சென்று சாந்தி பெற வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம்
**ந.சச்சிதானந்தன்**
தலைவர்

## தங்கத் தமிழ் அன்னையின் சிங்கம் நிகர் புதல்வனே!
### உனக்கோர் அஞ்சலி -

கடல் கடந்த சூழ்நிலையில் வாழும் எம்மவர்களுக்கு, பெருமைக்குரிய எம் தமிழன்னையின் அழகையும் உயர்வையும் பத்திரிகைகளிலும் மேடைகளிலும் அடிக்கடி முழங்கிக் கொண்டிருந்த ஒரு பெருந்தகையின் "நா" அடங்கி விட்டது. எண்பது அகவைகளைத் தாண்டி விட்டாலும் அவையோரைச் சுண்டி இழுக்கும் நா-வல்லாளன், நாவுக்கு- அரசன், வித்துவான் க.ந. வேலன் அவர்கள்.

அவர் ஆசிரியப் பணியாற்றிய ஹாட்லி கல்லூரியில் உயர்வகுப்புப் படித்த மாணவர் கூட அவர் நடாத்தும் வகுப்புக்களுக்கு மீண்டும் தவறாமல் வருகை தந்து அடக்கமாய் இருந்து அவர் பொழியும் தமிழ் மழையில் நனைந்து உள்ளம் பூரித்ததை இன்றும் நினைவு கூருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் எழுபதுகளில் தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களில் வித்துவான் வேலன் பேசுகிறார் என்று விளம்பரப்படுத்தினால் மைதானத்தில் மக்கள் வெள்ளம் அலை மோதும். தெருவில் நிற்கும் சாமானியனுக்கும் புரியும் விதத்தில் ஒலிவாங்கியின் முன் தமிழோடு விளையாடியவர் - மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர் - வித்துவான் வேலன் அவர்கள்.

நாவன்மை ஒருபுறமிருக்க எண்பது அகவையிலும் ஆண்டவன் அவருக்கு வழங்கியிருந்த அபார ஞாபக சக்தி குறிப்பிடத்தக்கது. அவரது எழுத்தோவியங்கள் தொடர்ச்சியாகப் படிப்போர்க்கு இது தெரிய வந்திருக்கும்.

ஆங்கில நாடகப் பேராசான் ஜோர்ஜ் பேணாட்ஷாவின் நாடகங்களில் சேர் யாழ்ப்பாணம்( Sir Jaffna) என்ற பாத்திரம் ஏன் வந்தது? எப்படி வந்தது? அதற்குக் காரணமான சேர் முத்துக்குமாரசுவாமி போன்ற எமது மூத்த தலைமுறையினர் ஆங்கில ஆட்சியாளர்கள் மத்தியில் பெற்றிருந்த பெருமதிப்பு எத்தகையது?

18 வயதிலே கேம்பிரிட்ஜ் பல்கலைப்பட்டம் பெற்ற ஆனந்தகுமாரசுவாமி இப்படியாக இவர் போன்ற நாம் அறிந்திராத பல அரும் பெரும் தகவல்கள் வித்துவான் வேலன் என்ற நடமாடும் தகவற் களஞ்சியத்திலிருந்து எமக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன.

எழுபதுகளின் பிற்பகுதிகளில் எமது யாழ் நூல்நிலையம் தீக்கிரையாக் கப்பட்ட போது என் மனதில் ஏற்பட்ட வெறுமை - உணர்ச்சி

இப்போது வித்துவான் வேலனின் மரணச்செய்தி கேட்டதும் மீண்டும் ஏற்பட்டது.

கொழும்பில் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த வேளையில் வருடாந்தத் தமிழ் விழாவில் சிறந்த நடிகர், சிறந்த கட்டுரையாளர் பரிசு எனக்கு வழங்கப்பட்டது. வித்துவான் வேலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து பரிசுகளைக் கையளித்தார். பின்னர் சிறப்புரை ஆற்றினார்.

அன்றுதான் என் முதற் சந்திப்பு. இந்தப் பிரமிப்பூட்டும் பேச்சாளர் எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் என்றும் அண்ணாமலைப்பல்கலைக்கழகம் செல்லுமுன் அதே புனித பெனடிற் கல்லூரியில் சில காலம் படித்தார் என்றும் பின்னர் தெரிந்து கொண்டேன்.

"அழகுமணி மாளிகையின் அலங்காரத்திருவுருவே

ஆடிவரும் பொன்விளக்கே அழித்தெழுதாச்சித்திரமே" என்று தி,மு.க அரசியல் தலைவர்களின் அடுக்குமொழி ஜாலங்களினால் ஈர்க்கப்பட்ட அறுபதுகளின் இளைய தலைமுறையைச் சேர்ந்தவன் நான். சிவாஜியின் தூய தமிழ் வசனங்களை ரசித்த எமக்கு இன்று பிரபுவின் தலைமுறையினர்"பில்லைகள்" என்றும் " மணைவி" என்றும் பேசுவதைக் கேட்க அருவருப்பாக இருக்கிறது. எங்கள் இலண்டன் தொலைக்காட்சி விளம்பரங்களில்

" கன்னுக்கு பென் அலகு
பென்னுக்கு நகை அலகு"

என்றெல்லாம் பேசும்பொழுது ஆத்திரத்தை ஊட்டுகிறது.

தரம் கெட்ட இந்த சினிமா டிவி ஊடகங்கள் புலம்பெயர் குழந்தைகளை கெடுத்துக் குட்டிச்சுவராக்குவது பற்றி மிகவும் கவலைப்பட்டவர் வித்துவான் வேலன் அவர்கள்.

எமது மொழியையும் எமது கலாச்சாரத்தையும் எதிரிகளிட மிருந்து பாதுகாத்து எமது முன்னைய மூத்த தமிழ்த்தலைமுறைபோல் ஆங்கில மக்களே பாராட்டும் அளவுக்கு உயர வேண்டும் என்பது வித்துவானின் ஆசை. அவரது கனவை நனவாக்குவோம். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**விமல் சொக்கநாதன்**
வழக்கறிஞர் - ஒலிபரப்பாளர்

## வித்துவான் வேலன்

ஆயிரத்துத் தொழாயிரத்து ஐம்பதுகளில் பாடசாலைகளிலே அறிவுப் போட்டிகளில் நடாத்துவதற்காக வித்துவான் வேலன் அவர்களை அழைப்பதுண்டு. அந்நாட்களில் அவரது பேச்சுத்திறன் கண்டு வியந்தவர்களின் நானும் உருவன். தலை சிறந்த இந்தப் பேச்சாளனை அதே ஆண்டுகளில் அரசியல் மேடைகளிலும் பேசக் கேட்டிருக்கிறேன். வசீகரிக்கக்கூடிய இவரது பேச்சுக்களைக் கேட்பதற் கென்றே அரசியல் கூட்டங்களுக்குச் செல்லும் இளைஞர்களையும் நான் அந்நாளில் பார்த்திருக்கின்றேன்.

அதற்கடுத்து ஐம்பது ஆண்டுகளில் பின்பு நாம் நடாத்தும் வாராந்த "வானொலி மஞ்சரி" என்னும் நிகழ்ச்சியிலே திருமதி விஜயலட்சுமி வேலன் அவர்களது சமையற்கலை என்ற நூலிருந்து சமையல் செய்யும் முறைகளை எடுத்து ஒலிபரப்பும் போது வித்துவான் வேலன் அவர்களது எழுத்துதிறனையும் அறிந்து கொண்டோம்.

திருமதி வேலன் அவர்களது நூலுக்கு நீண்டதொரு முகவுரை யை எழுதியி ருந்தார் வித்துவான் வேலன் அவர்கள். படிக்கப்படிக்கத் தித்திக்கும் அந்த முகவுரையை மூன்று வாரங்களாகத் தொடர்ந்து எமது வானொலி மஞ்சரி என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பியிருந்தோம். எமது ஒலிபரப்பைக் கேள்வியுற்ற வேலன் தம்பதிகள் எம்மைக் கண்ட போது யாழ்ப்பாணத்துச் சமையல் ஒன்றை உங்களுக்கு அளிக்க வேண்டும் வீட்டுக்கு வாருங்கள் என அழைத்தார்கள்.

அன்பான அவர்களது அழைப்பையேற்று அவர்களிடம் நாம் செல்வதற்கு முன்பு வித்துவான் வேலன் அவர்கள் மறைந்து விட்டார்கள். யாழ்ப்பாணத் தமிழனது பண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய வித்துவான் வேலனை என்னும் மறப்பதற்கில்லை. அவரது மனைவி பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

**ஆ. தில்லைநாதன்**
**யோகா தில்லைநாதன்**
59 Tolworth Rise North
Tolworth, Surbiton, Surrey KT 5 9EN

# மனித நேயம் மிக்க ஆசான்

மண்ணுலகைத் துறந்து இறைவன் பாதத்தில் ஒன்றறக் கலந்து, எல்லோரினதும் இதயத்தில் வீற்றிருக்கும் அமரர் வித்துவான் க.ந.வேலன் அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும், எனதும் என் துணைவியார் சேர்ந்தும், அத்துடன் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கியசாம்ராட்சிய (UK) கிளையின் முன்னாள் தலைவர் என்ற முறையிலும் அதன் பழைய மாணவர்கள் சார்பிலும் எங்கள் கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க!
இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க!

வித்துவான் வேலன் ஐயா அவர்களுடன்1960 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்த காலந்தொட்டு அன்னார் இந்த நாட்டிற்கு முதன் முறையாக 1993 ஆம் ஆண்டு வருகை தந்த பொழுதும் பிற்பாடு சில ஆண்டுகள் கழிந்து இந்நாட்டிற்கு நிரந்தரமாக வந்த காலம் தொடக்கம் அவருடன் எனக்கு தொடர்பு இருந்து வந்தது. உண்மையில் 1993 ஆம் ஆண்டு இந்நாட்டிற்கு வருவதற்கான வீசா நிராகரிக்கப்பட்டது. பின்பு அவருடைய வழக்கைக் கொண்டு நடாத்தி மேன்முறையீடு செய்து அவ்வழக்கை நடுவர் முன்னிலையில் வாதாடி சித்தி பெற்று இந்நாட்டிற்கு இவரை முதன் முறையாக வரவழைத்த பாக்கியம் பெற்றவன் என்பதில் பெருமை கொள்கின்றேன்.

வித்துவான் வேலன் ஐயா அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் படிப்பித்த காலத்தில் (1960-1971) அவர் மாணவர்களின் கல்வியில் மட்டுமன்றி அவர்களின் பல்வேறுபட்ட வளர்ச்சியிலும் பங்குகொண்டு அறிவுரை வழங்கி ஊக்குவித்தார். எப்பிரச்சனையையும் சினேகித முறையில் அணுகுவார். எல்லோருடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றிருந்தார். மனித நேயம் உள்ள ஆசான் இவர். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். யாமார்க்கும் குடியல்லோம் என்ற நாவுக்கரசர் கூற்றுக்கிணங்க தனது வாழ்க்கையை நடாத்தியவர். நகைச்சுவையுடன் கலந்து பேச்சாற்றும் வல்லமையுடையவர். சமய சமூக சீர்திருத்தவாதி. ஏன் அரசியலிலும் ஆர்வம் மிக்கவர். சமயத்துடன் கலந்து சமூகம் நல்லமுறையில் வாழ்வதற்கு பெரும்பாடுபட்டார். இக்கோட்பாட்டிற்கு இணங்க செயலாற்றிய பெருந்தகை.

எப்படியும் வாழலாம் என்று கூறுபவர்களுக்கு இப்படித்தான் வாழவேண்டும் என்று ஆணித்தரமாக கூறுவார். சிறந்த போற்றத்தக்க எழுத்தாளர். பல நூல்களைப் படைத்திருக்கிறார். வேறும் பல நூல்கள் அச்சகத்தில் இருப்பதாகவும் வெகுவிரைவில் வெளியிட இருப்பதாகவும் அறியும்போது இப்பொக்கிஷங்களினூடாக ஐயா அவர்களின் நினைவு எமது நெஞ்சில் எப்பொழுதும் நிலைத்து நிற்கும் எனபதில் ஐயமில்லை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

குமாரசாமி சிதம்பரப்பிள்ளை
ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன்

சன்றைஸ் வானொலி
சன்றைஸ் வீதி
சவுத்தோல்
11.06.2003

## இலக்கியப்பரப்பின் முக்கிய இழப்பு

தமிழ் அறிஞர் வித்துவான் க.ந. வேலன் இலண்டனில் காலமான செய்தி அறிந்து வேதனை அடைகிறேன்.

எண்பது வயதிலும் மிடுக்கும் துடிப்பும் தளராத எழுத்தாளன். ஏற்ற கருத்து எதையும் எவருக்கும் அஞ்சாது உரைக்கும் பேச்சாளன். கவிதை, கதை, சொற்பொழிவு, என இலண்டன் இலக்கிய நிகழ்வுகளுக்கு மகிழ்வு தந்த தமிழ் அறிஞன்.

சீமையில் தமிழ்ப்பாவனை தேய்கின்ற நிலையில் இவர் இழப்பு இலண்டன் இலக்கியப்பரப்புக்கு முக்கிய இழப்பு.

அவரை இழந்துள்ள மனைவி மகள், மருகர் அற்றும் மற்றும் உறவுகளுடன் துயரைப் பகிர்கின்றேன்.

**கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்**
இணைப்பாளர்
தமிழ்ச்சேவை

# கனடா வாழ் தமிழர் அதிர்ச்சி

வித்துவான் க.ந. வேலன் அவர்களுடைய திடீர் மறைவுச் செய்தி கனடாவுக்கு வந்த போது இங்குள்ள அவரைத் தெரிந்தவர்கள் இலக்கிய நண்பர்கள் எல்லோரும் அதிர்ச்சிக்குளானார்கள். வித்துவான் வேலன் அவர்கள் இலங்கையில் இருக்கும் போதே வெறுமனே ஒரு பாடசாலை ஆசிரியராக இருக்கவில்லை. அநேகமாக அங்குள்ள இலக்கிய மேடைகளையும் அரசியல் மேடைகளையும் அலங்கரித்து வந்த ஓர் முக்கிய புள்ளி. அதன் முக்கியம் என்ன வென்றால் தன்னுடைய கருத்தை எவருக்கு முன்னாலும் துணிந்து கூறக்கூடியவர். அவர் இங்கிலாந்துக்கு வந்த பின்னரும் கூட தன்னுடைய அந்தப் பணியை மறந்து விடவில்லை.

முக்கியமாக அண்மையில் "எனது நினைவுகள்" என்ற தொடரை இலண்டனில் இருந்து வெளிவரும் நண்பர் இராஜகோபாலின் புதினம் பத்திரிகையில் எழுதி வந்தார். அதிலுள்ளசில முக்கியமான விடயங்களை நான் கூட கனடாவில் மீள்பிரசுரம் செய்துள்ளேன். தமிழர்களுடைய வாழ்க்கை முறைகள், உணவுகள், பழக்க வழக்கங்கள் வீட்டுக் கலாச்சாரங்கள், எவ்வாறு மாற்றமடைந்து வருகின்றன என்பதை மிக மிக எளிமையாகவும் இலக்கியச் சுவையோடும் நகைச்சுவையோடும் எழுதியிருந்தார்.

கடைசியாக "பேர்னாட் சோ" அவர்களுடைய நாடகத்தில் "சேர் யாழ்ப்பாணம்" என்கின்ற பாத்திரம் பற்றி நன்றாகக் கண்டு பிடித்து அது பற்றி எழுதியிருந்தார். இன்னுமொரு இடத்தில் நான் படித்துச் சுவைத்தது, இங்கும் பல இடத்தில் சொல்லி வந்தேன். குடும்பங்களில் கணவனும் மனைவியும் வேலைக்குப் போகும் போது அவர்களுடைய பிள்ளைகளைக் கொண்டு வந்து Day Care இல் விட்டுச் செல்வது பற்றி நன்றாக எழுதியிருந்தார்.

அநேகமாக தமிழரின் வீடுகளின் குசினிகள் துப்புரவாக இருக்கின்றன என்றும் ஏனென்றால் அவர்கள் அங்கு சமைப்பதில்லை. தாயானவள் வேலையால் வரும் போது ஒரு ஒரு கையில் Day care பிள்ளையும், மறு கையில் Take Away சாப்பாடும் கொண்டு வருவார் என்று . இவ்வாறு பல. நாங்கள் கவனிக்காமல் போகின்ற எமது கலாச்சார மாற்றங்கள் பற்றி வேலன் ஐயா தான் கொண்டிருந்த கவலையையும் ஆதங்கத்தையும் இலக்கிய எழுத்துக்கள் மூலமாக நகைச்சுவையாக மக்கள் மத்தியில் புகுத்தி வந்தவர்.

நிச்சயமாக அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது. அண்மையில் அவர் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டு இருந்தார். இந்த வயதில் கூட அவர் தன்மான இனவுணர்வு மிக்க பெரியாராக வாழ்ந்து வந்தார்.

கனடா வாழ் தமிழ் மக்கள் உலகெங்கும் வாழ் தமிழ் மக்க ளுடன் சேர்ந்து இந்த ஆழ்ந்த துயரத்தில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

எஸ் திருச்செல்வம்
ஆசிரியர்
தகவல் மையம் - கனடா

உ

சிவமயம்

ஓம் சிவயோக சுவாமிகள் திருவடிகள் போற்றி ஓம்

# தேகம் விழும் வரை வேகம் குறையாது விவேகத்துடன் செயற்பட்ட வேலன் ஐயா

"தம்பி மரணம் ஒரு சாதாரணமான விடயம்" வித்துவான் வேலன் ஐயா அவர்களை அண்மையில் King Georges மருத்துவ மனையில் உடல்நலம் விசாரிக்கச் சென்றபோது என்னிடம் கூறிய இவ்வார்த்தை, தனது வாழ்வின் இறுதிக்காலம் நெருங்கி விட்டதை அவர் முன்கூட்டியே உணர்ந்து விட்டாரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

வித்துவான் அவர்களை தமிழீழத்தில் நான் வாழ்கின்ற காலத்தில் எட்ட இருந்து அண்ணாந்து பார்க்கின்றவனாகவே இருந்தேன். ஆம். அகவையில், நெடிதுயர்ந்த கம்பீரத் தோற்றத்தில் மட்டுமன்றி அன்பை உணர்த்துவதில், அறிவை வெளிப்படுத்தலில், தான் பிறந்த மண்ணாம் தமிழீழத்திற்குப் பெருமை சேர்த்தலில் எனப்பல நிலைகளில் அண்ணாந்து பார்க்கின்ற உயரம் தான் ஐயாவினுடையது.

"சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞானவிளக்கு" என்னும் ஞானப்பொக்கிசம் தந்த வித்துவான் என்றும் எனது வணக்கத்திற் குரிய ஆன்மீகப் பெரியாராகவும் என்னுள் திகழ்கின்றார்.

அவரிடம் உள்ள தனித்துவமான சிறப்புக்களில் அவரது அஞ்சாமை என்னை மிக மிகக் கவர்ந்த விடயம். இந்த அஞ்சாமை வெறுமனே முரட்டுத்தனமானதானதோ அன்றி எழுந்தமானமானதோ அன்று. மனிதக் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டு சகல மக்களையும் உளமார நேசிக்கின்ற அவரது மானுட நேயத்தினால் அச்சம் அவரை அண்டவில்லை.

சமய, சமூகநல தாயக மேம்பாட்டுப் பணிகளில் எனக்குப் பல சந்தர்ப்பங்களில் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் அமைந்தார் என்பதை நன்றியுடனும் பெருமையுடனும் நினைவு கூருகின்றேன்.

லண்டனில் பல அமைப்புக்கள் நடத்திய விழாக்களுக்கு ஏற்றம் தரும் நோக்குடன், சிறப்புரைஆற்றவும், கலந்துரையாடல்களுக்கும் அழைத்த போதெல்லாம் தனது உடல்நிலையையும் பாராது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அன்புத் துணைவியார் சகிதம் வருகை தந்து அந்த நிகழ்வுகளைப் பயனுள்ளதாக்கினார்.

தமிழ் ஆர்வலர்களுக்கு சமயம், இலக்கணம், இலக்கியம் அரசியல் போன்ற விடயங்களில் ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தீர்க்கவும் அறிவை ஊட்டவும் நேரம் காலம் பாராது உதவிகள் நல்கிக் கொண்டிருந்த நடமாடும் பல்கலைக் கழகம் வித்துவான் ஐயா அவர்கள்.

தமிழும் தமிழரும் வாழும் வரை தமிழீழ வரலாற்றின் சிரஞ்சீவிகளில் வித்துவான் ஐயாவும் ஒருவர் என்பது நிச்சயம்.

அன்பன்

இ.முருகானந்தன்

CHUDEROLI PUBLICATION SOCIETY
சுடரொளி வெளியீட்டுக் கழகம்
No.9,7th Lane,off St. Benedict Road, Kotahena, Colombo-13
Tel No: 335070
12.06.2003

**தமிழ் பேரறிஞர் வித்துவான் க.ந. வேலன் அவர்களின் மறைவை-யொட்டி சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் செயலாளர் ஐ.தி. சம்பந்தன் வெளியிட்ட அனுதாபச் செய்தி**

ஈழத்தமிழர்களின் சிறந்த தமிழப்பேரறிஞராக விளங்கிய வித்துவான் க.ந. வேலன் அவர்கள் அரைநூற்றாண்டிற்கு மேலாக சமயம், தமிழ், இலக்கிய, அரசியல் பணியாற்றி வந்த அறிஞர், சிறந்த தமிழ் பேச்சாளனும் எழுத்தாளனும். ஆராய்ச்சியாளனும் ஆவார். ஆரம்பத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிற் பெரும் பேச்சாளனாக விளங்கிய இவர் தந்தை செல்வா, கோப்பாய் வன்னியசிங்கம் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

" இலங்கைத் தமிழர் வந்தேறு குடிகள்" என்று வரலாறு தெரியாது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா ஆபிரிக்கா நாட்டில்ஆற்றிய உரைக்கு ஆணித்தரமான பதிலைக் கொடுத்து தமிழர் இந் நாட்டின் மூத்த குடிகள் என்று ஆதாரத்துடன் நிரூபித்து ஒரு நூலை எழுதி ஈழத்தமிழர் மானங்காத்த பெரும் மேதையின் இழப்பு தமிழ் இனத்திற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயரக்கடலில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிள்றோாம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக !

**ஐ.தி. சம்பந்தன்**
செயலாளர்
சுடரொளி வெளியீட்டுக் கழகம்

## நெஞ்சைவிட்டகலா வித்துவான் க.ந.வேலன் அவர்களுக்கு

ஊரெழுவில் உருவெடுத்து உள்ளத்தில் தமிழ்சுமந்து
பாரெல்லாம் தமிழ் சுமந்த பாவலன் இன்று
ஊரெல்லாம் உருகிநிற்க ஒண்தமிழ்த்தாய் கண்கலங்க
பேரைமட்டும் விட்டுச் செல்லல் முறைதானோ!

அழகு தமிழ்க்கடவுளுக்கும் வேலன்என்ற பேருண்டு
ஈழமகன் உந்தனுக்கும் வேலன்என்றே பேருண்டு
தமிழ்மொழியே வாழ்வாக தமிழ்மண்மேல் உயிராக
புகுமண் கால்பதித்தபோதும் வாழ்ந்தவர் எம்வேலன்

தமிழும் கொடியும் கனியும் மூன்றாகும்
எழுத்தும் வேலன் பெயரில் மூன்றாகும்
இளமை இடைநிலை முதுமை முக்காலம்
இளையோனாய் எம்மிடையே வாழ்ந்திருந்தார் வித்துவனார்

எழுத்து சொல் பொருள் யாப்பு அணி அறிந்தார்
தொகுத்துச் சபைகளிலே தேன்மாரியாய் பொழிந்தார்
கவிச் சுவையாய் இனித்திருக்கும் கேட்கையிலே
தமிழ், வேலன் அவர்நாவில் வருகையிலே
மெல்ல வாய்திறந்து மலரிதழாம் உதடசைத்து
வெல்லத் தமிழ்பேச முக்கனிகள் தோற்றுவிடும்
மெல்ல விரலசைத்து மைவடிய கையெழுதும்
சொல்லெல்லாம் சுகந்தமாய் சுவை கூட்டும்
அறிவியல் அரசியல் அருந்தமிழ்க்காவல் ஆன்மீகம்
அறிந்ததோர் அரசனாய் அவனியில் வாழ்ந்தார்
அறுசுவை வரலாறென ஆக்கினார் நூல்சில
மறைந்தாலும் மறந்திடா மாண்பினையும் பெற்றார்
நேசமுடன் நீர்செய்த பணியெல்லாம் தமிழ்மண்ணில்
வாசமலராய் வையகத்தோர் வாழும்வரை வீற்றிருக்கும்
பூசைக்கென இன்று இறைவன் பறித்தானோ!
ஈசன் பாதமதில் இருக்கும் எம்வேலவனே!

**உரும்பையூர் எம். ரி. செல்வராஜா**

ரெட்பிரிஜ் தமிழ்ச்சங்கம்
புலன்பெயர் மண்ணில் நலன்பல புரிவோம்

Redbridge Tamil Society
20 Couchmore Avenue,
Clayhall Essex IG5 OPL.

## தமிழ் விருட்சம் வீழ்ந்தது

உலகில் மக்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைவது இயற்கை. இயற்கையை எவராலும் மாற்ற இயலாது. இவ் இயற்கையின் நியதிக்கு தமிழ் விருட்சம் வித்துவான் க.ந.வேலன் அவர்களும் விதிவிலக்கல்ல. இதை முன்கூட்டியே உணர்ந்த அமரர் தன் வாழ்நாளில் அறநெறியில் நின்று வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி உயிர்க்கு உறுதி பயக்கும் செயல்களைச் செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினார்.

உலகில் பிறந்தோர் ஒல்லும் வகையால் நலந்தரும் செயல்கள் நாளும் செய்வதே மக்கள் பிறவியின் மாண்புறு செயல் எனத்தக்க நல்லறிவினை தரணிக்கு உணர்த்தினார். இவ்வுரைகளைச் செவிமடுத்தாற் போல் அமரர் வித்துவான் வேலன் அவர்களின் வாழ்க்கை அமைந்தது.
தமிழ் அறிஞர் திரு க.ந. வேலன் அவர்கள் தமிழுக்கும் தமிழ் சமூகத் திற்கும் ஆற்றிய சேவை சொல்லில் அடங்கா. தலைசிறந்த சொற்பொழிவாளர், தரணி போற்றும் தமிழ் எழுத்தாளர், செம்மை மிக்க சமூக சேவையாளர், சிறந்த நல்லாசான், இவற்றிற்கு எல்லாம் மேலாக இவர் ஒரு சிறந்த பண்பாளர், நல்லதன் நலன்களையே நாடுபவர். இத்தகைய ஒருவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது ஒன்றே.

தமிழ் சமூகத்தின் வரலாற்றுக் கட்டமைப்பில் காலத்திற்குக் காலம் பல்வேறு அறிஞர்கள் வாழ்ந்து மறைந்திருக்கின்றார்கள். அவர்கள் சமூகத்திற்குப் பயன்பட்டவர்களாக மக்களை நல்வழிப்படுத்தியவர் களாக வாழ்ந்து மறைந்துள்ளார்கள். அவ்வகையில் அமரர் திரு க.ந.வேலன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர். அவரது இழப்பு காலத்தால் ஈடுசெய்ய முடியாத ஒன்று.

" ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு
- திருக்குறள்

**அ.பி.மரியதாஸ்**

## தமிழ்ப்பேரறிஞர் வித்துவான் க.ந.வேலன் அவர்களின் மறைவையொட்டி இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் - வட இலண்டன் தமிழ்ப்பாடசாலை நிர்வாகத்தினர் வெளியிட்ட அநுதாப அறிக்கை

திரு வித்துவான் க.ந.வேலன் அவர்கள் கடந்த 07.06.2003 அன்று காலமாகி விட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு மிக்க துயர் அடைந்துள்ளோம். தமிழினை - மரபுவழியில் கற்றறிந்த தமிழ் அறிஞர்கள் அருகி வருகின்ற காலத்திலே கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக மேற்குலகில் தமிழ்த்தொண்டாற்றிய இம்மரபுவழித் தமிழ் அறிஞரின் தொண்டால் பயனடைந்தோர் பலர். பல பொது நிறுவனங்கள் - சங்கங்கள் - தமிழ்ப்பாடசாலைகள் - போன்றன அன்னாரின் ஆக்கபூர்வமான ஆலோசனை சிந்தனைச் செறிவு மிக்க உரை போன்றவற்றால் செழுமைப்படுத்தப்பட்டன.

அவ்வகையில் இப்பெருமகனார் எம் பாடசாலை கடந்த 13.04.2002 நடாத்திய தமிழ்ப்புதுவருடப் பிறப்புக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய சிறப்புரை இன்றும் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அன்று அவர் மாணவர்கட்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் புரியும்படியாக மிகவும் எளிமையாக தமிழ்ப் புதுவருடப் பிறப்பினைப் பற்றி விளக்கமளித்து மகிழ்வளித்தார்.

எம் பாடசாலை 13.07.2002 இல் நடாத்திய வருடாந்தக் கலைவிழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி எங்கள் எல்லோரையும் மகிழ்வித்தார். அன்று அவர் நேரம் பிந்திய நிலையிலும் பொறுமையுடன் எங்கள் மாணவர்களின் நிகழ்வுகளைப் பார்த்து மதிப்பீட்டு முறையில் ஆற்றிய உரையும் பாராட்டும் எங்களுக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்தன.

புலம்பெயர் வாழ்வில் தமிழ் சிறார்களின் தமிழ் மொழிக்கல்வி பற்றி மிகவும் நுட்பமாகச் சிந்தித்த இச்சிந்தனையாளர் எங்களுக்கு தம் உரை மூலம் கூறிய அறிவுரைகள் எங்களால் என்றும் நினைவுகூரத்

தக்கன. கடந்த 50 வருடங்களுக்கும் மேலாகத் தமிழ்த் தொண்டாற்றி வந்த இப்பெருமகனார் மாணவர்களுடனும் மிகவும் நெருக்கமாக நண்பனாகப் பழகி சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். இறக்கும் வரையிலும் எத்தனையோ தமிழ் ஆர்வலர்களுக்கு தமக்குத் தெரிந்த தமிழ் அறிவினைக் கற்பிப்பதில் இவர் காட்டிய ஆர்வம் அளப்பரியது. இவரிடம் இங்கும் தமிழ் கற்றுப் பயனடைந்தோர் பலர்.

மிகச் சிறந்த சிந்தனை, தெளிவான தொலைநோக்கு, நட்புடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பு, தவறுகளைக் கண்டு, தமிழ் மொழிப்பற்றால் சாடிடும் ஆண்மை, இவை யாவும் மிக்க சீரிய தமிழ்ப்பண்பாளர் ஒருவரை நாம் இழந்து விட்டோம்.

அன்னார் எம் சங்கத்திற்கு இருமுறை வருகை தந்து எம்மையும் மாணவர்களையும் உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தியதை நாம் என்றும் மறவோம்.

வித்துவான் க.ந.வேலன் அவர்களின் ஆக்கங்கள் காலங் கடந்தும் தமிழ் கூறும் நல்லுலகில் மிக்க பயன் தரும் இலக்கியங்களாக நிலைத்து நிற்கும். அன்னாரின் மாணவர்கள் அவரின் கொள்கைகளைத் தொடர்ந்தும் எடுத்துச் சென்று அவரின் புகழை நிலை நிறுத்துவார்கள்.

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் - அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளிற்கேற்ப வாழ்ந்த இத்தமிழ் மூதறிஞரை இழந்து நிற்கின்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் சங்கத்தின் சார்பில் எங்கள் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்**
**- வட இலண்டன் தமிழ்ப்பாடாலை**
**மாணவர்கள், பெற்றோர்கள்,**
**ஆசிரியர்கள் நிர்வாகக்குழுவினர்.**

# Essex Tamil Socity
# எசெக்ஸ் தமிழ் கழகம்

## ஒரு முதிர்ந்த கனிந்த உள்ளத்தை இழந்து விட்டோம்

நாம் நாடும் போதெல்லாம் எம்மை அணைத்து எங்கள் அழைப்புக்களை ஏற்று வருகை தந்து எமக்கு ஒரு தமிழ் அறிஞராக, தமிழ் உணர்வாளராக ஒரு தந்தையாக எமக்கு வழிகாட்டியாக வித்துவான் திரு. க.ந. வேலன் எமது எசெக்ஸ் தமிழ்க் கழகம் இழந்துவிட்டது.

வித்துவான் அவர்கள் இன்றைய காலகட்டத்தில் இலண்டன் வாழ் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கலங்கரை விளக்கமாக, ஒரு அறிவுச் சுரங்கமாக நினைவாற்றலின் உறைவிடமாக முதிர்ந்த வயதிலும் தெளிந்த சிந்தனைத் திறனுடன் கூடிய பேச்சாற்றலுடன் எம்முன் எப்போதும் தோன்றினார்

கலை இலக்கிய பண்பாடு, உலக ஒழுக்கம், குடும்ப உறவுகள் தனிமனித வாழ்வு என்பன பற்றி அனைத்து விவகாரங்களிலும் மிகவும் தெளிவான தீர்க்க தரிசனத்துடன் எம்மையெல்லாம் வழிகாட்டிய விலையில் எம்முன் வாழ்ந்த இப் பெருமகனை எமது எசெக்ஸ் தமிழ்க்கழகத்தின் பெற்றோா. ஆசிரியர் மாணவர்கள், குழந்தைகள் அனைவரும் நினைவுகூரக் கடமைப்படடுள்ளோம்.

இவரது பிரிவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தமிழ்த் தேசத்திற்கும், அவரது மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் சுற்றத்தினர்க்கும் எங்கள் நெஞ்சு நிறைந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ் கற்றுணர்ந்தவாகள் என்றும் மரணிப்பதில்லை என்ற நம்பிக்கைக்கு இணங்க வித்துவான் திரு.ந.க. வேலன் அவர்கள் மரணத்தை வென்று தமிழ்த் தாயின் திருவடிகளிலும் பரம் பொருளின் பெருநிழலிலும் நீடுழி வாழ்வார் என்ற நம்பிக்கையுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆண்டுபல மக்களுக்காய்த் தமிழ்த் தொண்டாற்றி வந்த
அன்புருவாம் வித்துவான் வேலன் எ னும் அன்புத்தெய்வம்
மீண்டுமொரு பிறப்புடையாப் பெரும் பெற்றே
விமலனடி தஞ்சமென மோட்ச வீடு புக்கார்
பிறந்திடு நல்லுயிர்கள் எல்லாம் இறந்திடுதல்
உறுதியெனத் தமிழ் மறைகள் பேசுகின்ற நல்லுரையை
மறந்திடுதல் நன்றன்று மாற்றமதில் ஒன்றுமில்லை
மாநிலத்து வந்துதித்த மக்காள் கேண்மீர்
திறந்த மனத்தினராவீர், தீமைகளை அற மறப்பீர்
தில்லை தனில் திரு நடனம் செய்து நிற்கும்
இறைபதமே அறுதியென மன மொன்றித்து
ஆராதித்து அமைதியுற்று வாழ்வீர் .
ஓம் சாந்தி !

**பெற்றோர், ஆசிரியர் , மாணவர்கள, நிர்வாக சபை உறுப்பினர்கள்**

சீவன் முத்தராய்ச் செந்தமிழ்ச் சொத்தாய்ப்
பாவில் நடந்த பாதத்திருவடி
நாவில் நவிற்றி நான் பெற்றபேறு
ஆவி கலந்தது ஆனந்தமானது

எனத் தமிழின் மூதாட்டி அவ்வை குறித்து பாட்டெழுதிய வேளையில் தனது மனது அனுபவித்த உணர்வுகளை வித்துவான் வேலன் ஐயா அவர்கள் பாட்டாக எழுதி வைத்தார். இத்தகைய ஒரு மன உணர்வைத்தான் வித்துவான் வேலன் ஐயா அவர்களை ஒக்ஸ்போர்டு வாழ் தமிழர்கள் சார்பாக 14.01.2001ல் நாம் அழைத்து தமிழ்ச் சான்றோர் என்ற விருதை அவருக்கு அளித்த போது ஒக்ஸ்போர்டு வாழ் தமிழ் மக்களாகிய நாம் பெற்றோம். இத்தகைய உணர்வு ஏன் எமக்கு ஏற்பட்டதென்றால் அவரின் எழுத்தில் நக்கீரரின் சத்தியாவேசத்தை எமது மண் கண்டிருக்கின்றது. அவரது வாழ்வில் தமிழ்ப்பண்பை நம்மவர்கள் கண்டு அனுபவித்திருக்கின் றோம். ஒக்ஸ்போர்ட்டில் தனது பேச்சை அவர் தொடங்குகையில் - பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல் - மண்புக்கு மாய்வது மண் - என்ற குறளைக் கூறி வள்ளுவர் இவ்வுலகை செல்வந்தர்களுக்கோ செயலாற்றலுள்ளவாக ளுக்கோ சொந்தமானதாக கூறவில்லை பண்பாளருக்கு உரியது இவ்வுலகு என்று கூறுகின் றார் என்று அவர் விளக்கமும் அளித்தார். ஆம். இப்படித்தான் வாழ்ந்தார்கள் என்பது நாகரீகம் இப்படித்தான் வாழவேண்டும் என்பது பண்பாடு. இப்படித்தான் வாழவேண்டும் என்று வரலாற்றை மாற்றுகின்ற வரலாறு படைப்பவர்கள் காலத்தை வெல்லும் காவியம் படைக்கும் வரலாறாக தம் வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றனர். வித்துவான் வேலன் ஐயாவின் சொல் செயல் இரண்டுக்கும் இந்த வல்லமை உண்டு.

அதனால் தான் அவர் வணக்கம் ஐபிசி வானலை நிகழ்வு ஒன்றில் இன்றைய விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் தனக்கு என்றுமே சவால் விடுத்துதான் பழக்கம் ஏனோ தெரியாது தன்னால் ஒத்துபோகும் போக்கில் வாழமுடியாது உள்ளது என்று கூறினார். அது தான் தன்மானம். ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின்

அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று என்பது தன்மான-இனமானக் குறள். இதனை உணர்ந்தவர் வாழ்வு போராட்டக்களம் தான்.

வித்துவான் வேலன் ஐயா தன்னுடைய பெயருடனேயே போரிட்டவர் இரத்தின வேல் என்னும் தன் பெயரை வேலன் என மாற்றி வேலன் என்ற பெயர் ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட மக்களைச் சுட்டும் பெயர் என்ற சாதியஉணர்வை சாகடிக்க வைத்தவர். சாதி சமயச் சழக்கில்லா ஈழத்தில் நீதியிலே ஆட்சி நிமிர்ந்து நிற்க நீர் காண்பீர் என்று மீண்டும் மலர்ந்து வரும் தமிழீழ ஆட்சியின் தன்மை சொன்ன வித்துவான் வேலன் - கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் - கல்வி முற்ற வல்லாரும் இல்லை - என்ற கம்பனின் கல்விக் கொள்கையின் வழி கல்வி கேள்வி மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சக்தி அளித்து எல்லா ஒடுக்குமுறைகளையும் அடக்கு முறைகளையும் எதிர்த்து நின்று வையத்தில் வாழ்வாங்கு வாழ மனிதனைப் பழக்குவதையே தனது வாழ்வின் இலக்காகக் கொண்டு வாழ்ந்தவர். இத்தகைய தலைசிறந்த சிந்தனையாளர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோமென்று தமிழர்களாகிய நாம் பெருமையடைகிறோம்.

இந்நேரத்தில் வள்ளுவருக்கு வாசுகி போல் வித்துவான் வேலன் என்ற பெருந்தகைக்கு அறிவிலும் அன்பிலும் உடன்துணையாக விளங்கிய அவரின் அன்பு மனைவி திருமதி லக்சுமி அம்மா அவர்களுக்கும் - ஒரு மகள் தன்னைப் பெற்றேன் - உணர்வெலாம் அவட்கே தந்தேன் - திருமகள் போல் வளர்த்தேன் என வித்துவான் வேலன் ஐயா அவர்கள் கூறிய திருமதி மாதினி சிறிக்கந்தராசா அவர்களுக்கும் - திருமுருகிறைவன் தன்னை மருமகனாத் தந்து மாண்பொடு வாழ்வு பெற்றாய் என அவர் போற்றிய அவரின் மருமகன் சட்டத்தரணி செ. சிறீக்கந்தராசா அவர்கட்கும் - கருமணி அனைய ஞானப் புதல்வராய்ப் புதல்வியாய்த் திகழும் அவரின் பேரக் குழந்தைகளுக்கும் ஒக்ஸ்போர்ட் தமிழர்கள் சார்பாக எங்கள் அன்பையும் ஆதரவையும் இத்துயரமான நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Dr. Jeya Nedesalingam - Chairperson

Mrs. Rita Fatimaharan

PGDiploma (Housing), PGDiploma (Social Policy), BA, BSc.(Sec)

# பிரித்தானிய தமிழ்க்கலாமன்றம்
# Brittania Tamil Cultural Forum

57 Boundary Road, London E17 8NQ Tel:020 8503 6643

காலனவன் அழைக்கக் கனபேர் காத்திருக்க
வேலணையா நீங்கள் விரைந்திட்ட காரணமென்?

புலம்பெயர்ந்த எம்மவரின் பலம்மிக்க பனைமரமே!
நிலைகுலைந்து போய்விட்டோம் நின்பிரிவு கேட்டதனால்

சந்தேகம் வந்திட்ட வேளையெல்லாம் இரவுபகல்
எந்நேர மானாலும் தீர்த்துவைக்கும் தமிழ்க்கடலே

புதினமெனும் பத்திரிகைப் பக்கமொன்றை அலங்கரித்து
புதுமைமிகு கருத்துக்கள் பருகவழி தந்துநின்றீர்

இஸ்லாமியத் தமிழரது இதயமதில் இடம்பெற்று
விஸ்வரூபம் எடுத்திட்ட விடயத்தை விவேகமுடன்

ஆதாரம் பலகொண்டு அவர்களோடு எம்மவர்க்கும்
போதித்து நின்றிட்ட பெருஞ்சுடரே வணங்குகின்றோம்

ஈழத்தமிழர் இங்கு இளிச்சவாயர் இல்லையென
நீளக்குரல் கொடுத்த நெடுமகனே எங்குற்றீர்?

அறிவுப்பசியெடுத்த வேளையெல்லாம் அடுக்கடுக்காய்
அறிவுக்கனி தந்த அருஞ்சுனையே ஏன்பிரிந்தீர்

தமிழ்த்தாகம்கொண்டு தவிக்கின்ற வேளையெல்லாம்
தமிழமுது சுரந்திட்ட தமிழ்ச்சுவையே எங்குற்றீர்
உற்றோர் போலணைத்து உடனிருந்து விருந்தளித்து
கற்றவற்றைக் கவினோடு கவித்துவமாய்த் தந்துநின்றீர்

வாழ்க்கையெனும் பாதையிலே வகுத்துநின்ற போதனையை
ஆழஎங்கள் உள்ளமதில் அருமருந்தாய்த் தந்துநின்றீர்
அணியணியாப் பிரிந்தஎமை ஓரணிக்குள் கொண்டுவந்த
பணியிங்கு முடிந்ததென்று பயணமதைத் தொடர்ந்தீரோ
ஆழக்கடல்நின்று எழுந்துவந்த நன்முத்தே - நாம்
வாழும் காலமெல்லாம் வாழ்ந்திருப்பீர் எம்முளத்தில்

பால ரவீந்திரன்



அச்சுப்பதிப்பு: ஜே ஆர் அச்சகம் இலண்டன்
தொலைபேசி: 020 8503 6643